Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (14-7-66) இதழ் 154

பராபவ ஆனி 30 ரபி அவ் 24 வியாழக்கிழமை

## உலக உதைபந்தாட்டத்தை உயர் ஆசனத்திலிருந்து பார்த்த நாய்!

லண்டன், ஜூலை 13

உலக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் அதிக கோல் போடும் கோஷ்டிக்கு 1000 பவுண் வெகுமதியளிக்க லண்டன் இராக் கிளப் ஒன்று முன்வந்திருக்கிறது.

காணமற்போன உலக உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணத்தை ஒரு தோட்டத்திலிருந்து கண்டுபிடித்த பிக்கில்ஸ் என்ற நாய், உலக உதைபந்தாட்டத்தைப் பார்க்குமுகமாக வெம்பிளி திடலுக்கு அழைத்துச் செல்லப்பட்டது. அதன் சொந்தக்காரர் டேவிட் கோர்பெட் அதி உயர்ந்த கட்டண ஆசனத்திற்கு அதை அழைத்துச் சென்றார்.

புதிய துப்பறியும் சினிமாப்படம் ஒன்றில் நடிக்கும் பிக்கிள்ஸ் கூட்டத்தைக் கண்டு எவ்வித குணமாற்றமுமின்றி நல்லபடியாக நடந்து கொண்டது. (பி டி ஸி)

நெடுந்தீவில்

# துப்பாக்கிச் சூட்டுக்கு மூவர் பலி!

## ஒருவர் கைது; நால்வர் தலைமறைவு ஆபத்தான நிலையில் மற்றொருவர்

— நமது நிருபர் கே. அரசரத்தினம் —

யாழ்ப்பாணம், வியாழன்

நெடுந்தீவில் இரு சாராருக்கிடையே ஏற்பட்ட சச்சரவைத் தொடர்ந்து ௩ பேர் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானார்கள்! இன்னுமொருவர் கடுங்காயங்களுடன் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக கந்தையா பூபாலசிங்கம்என்பவரைப்பொலிசார் கைது செய்துள்ளனர். இன்னும் நான்கு சந்தேக நபர்களையும் அவர்கள்தேடி வருகின்றனர்.

இறந்தவர்களில் இருவர் சில தினங்களுக்கு முன்னர் நெடுந்தீவு கடற்கரையில் கட்டுமரமொன்றில் விளையாடிக்கொண்டிருக்கையில் காணமற்போன சிறுவர்களின் தந்தையராவர். கதிர்காமர் கந்தையா மயில்வாகனம் மாந்திரி, மலையாளி கந்தையா ஆகியோரே துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானவர்களாவர்.

மலையாளி சதாசிவம் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்ரிண்டன்ட் திரு. மகேந்திரனும், யாழ்ப்பாண மாவட்ட மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினமும் ஸ்தலத்தில் விசாரணை நடத்தினர்.

கந்தையா குழந்தை, வயிரவநாதன் ஐயம்பிள்ளை, வயிரவநாதன் செல்லப்பா, எஸ் மாணிக்கம் ஆகியோரையே பொலிசார் குறிப்பிட்ட சம்பவம் சம்பந்தமாகத் தேடி வருகின்றனர்

## திருமலை வங்கி ஊழியர் பிரச்னை முடிந்தது.

### ஆனால் வேலைநிறுத்தம் தொடரும்?

கொழும்பு, வியாழன்

திருக்கோணமலை கூட்டுறவு வங்கியில் நடைபெற்று வந்த வேலைநிறுத்தத்துக்கான பிரச்னை நேற்று தீர்த்துவைக்கப்பட்டது.

தொழில் மந்திரி வங்கி ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின்மூலம் இந்த முடிவு ஏற்பட்டிருக்கின்றது.

திருக்கோணமலை கூட்டுறவு வங்கி ஊழியர்கள் 15 பேருக்குவழங்கப்பட்டிருந்த வேலைநீக்க நோட்டீஸ் வாபஸ்பெறப்படும் என்று இப்போது தெரிகின்றது. பிரச்னை முடிவுற்றபோதிலும் நாஷனல் அன்ட் கிறின்வேஸ் வங்கி ஊழியருக்கு அனுதாபமாக இலங்கை வங்கி ஊழியர் சங்கம் நடத்திவரும் வேலைநிறுத்தம் முடிவுறும்வரை திருக்கோணமலை கூட்டுறவு வங்கி ஊழி

(8-ம் பக்கம் பார்க்க)

## பெற்றோர் விருப்பத்திற்கு ஏற்பவே போதனமொழி

### கல்வி மந்திரி அறிவிப்பு

கொழும்பு, வியாழன்

பிள்ளைகளின் போதனமொழியை பெற்றோர்களே தங்கள் விருப்பத்துக்கு ஏற்றபடி தெரிவு செய்ய அனுமதிக்கப்படுவார்கள். ஆங்கிலம் மூலமான போதன முறையும் உடனடியாக ரத்துச் செய்யப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட இத்தகவல்களை கல்விமந்திரிதம்மை பேட்டி கண்ட தூதுகோஷ்டி ஒன்றிடம் தெரிவித்திருந்தார்.

இலங்கைச் சோனகர் சங்கம் இவ்வார முற்பகுதியில் கல்வி மந்திரியைப் பேட்டி கண்டபொழுது சிங்களத்தையா அன்றித் தமிழையா போதன மொழியாகக் கொள்ளவேண்டும் என்பதை பெற்றோர்களின் விருப்பத்துக்கே விடப் போவதாகவும், வீட்டு மொழி தான் போதன மொழியாக இருக்கவேண்டும் அன்றி தாய்மொழி தான் போதனமொழியாக இருக்கவேண்டும் என்றோ

(8-ம் பக்கம் பார்க்க)

செனட் சபை

## தமிழரசு யு. என். பி. ஒப்பந்தம் அமுலாக்கப்படுகிறதாம்

### எதிர்க்கட்சியினர் கண்டனம்

கொழும்பு, வியாழன்

தேசிய ஐக்கியம் என்ற போர்வையில் யு. என். பி.க்கும் இலங்கை தமிழரசுக்கட்சிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் அரசாங்கம் இறங்கியுள்ளது என்றும் இதனால் உத்தியோக மொழிச்சட்டம் படுமோசமாகப் பாதிக்கப்படுவதுடன் நாட்டைப்பிரிப்பதற்கும் வழியேற்படப்போகின்றது என்றும் நேற்று செனட் சபையில் பேசிய செனட்டர் கரணகொட குற்றஞ் சாட்டினர்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணைக்கு எதிர்க்கட்சியினரின் திருத்தப் பிரேரணையை சமர்ப்பித்து செனட்டர் கரணகொட பேசினார்.

ஜனவரி 8-ம் திகதி தமிழ் மொழி விசேஷ விதிகள் மசோதா பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டபோது அதனை ஆட்சேபித்து வேலைநிறுத்தம் செய்தவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தாதது குறித்து அரசாங்கத்தை செனட்டர் கரணகொட கண்டித்தார். தமிழரசுக்கட்சியுடன் செய்து கொள்ளப்பட்ட இரகசிய ஒப்பந்தம் ஒன்றை அமுல் நடத்துவதின் காரணமாக இவர்களை மீண்டும்வேலைக்கு அரசாங்கம் அமர்த்தவில்லையென்றும் இதனால் சபை அரசாங்கத்தின் மீது நம்பிக்கைஇழந்துவிட்டது என்றும் அவர் கூறினர்.

எதிர்க்கட்சியினரின் மூன்றாவது திருத்தப் பிரேரணையின் மீது அவர்பேசியபோது நாட்டில் சிங்களம் மட்டும் ஒரே உத்தியோக மொழியாக இருப்பதற்குவழிசெய்யும் பொருட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள எல்லா பாடசாலைகளிலும் சிங்கள ஆசிரியர்களை அரசாங்கம் நியமிக்கவேண்டும் என்று கூறினர்.

எதிர்க்கட்சியினரின் திருத்தப்பிரேரணைகளின் மீது நேற்று முழுவதும் செனட்

(8-ம் பக்கம் பார்க்க)

## டாக்டர் சண்முகரெத்தினம் சிகிச்சை நிலையம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலுள்ள காலம் சென்ற டாக்டர் க. சி. சண்முகரத்தினம் அவர்களின் ஆயுள்வேத சிகிச்சை நிலையத்திற்கு பிஷக்வார டாக்டர் ஏ. கனகரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

டாக்டர் ஏ. கனகரத்தினம் முன்னர் கொழும்பு அரசாங்க ஆயுள்வேத கல்லூரியில் சித்தவைத்திய பகுதிக்கு சிரேஷ்ட போதனசிரியராக இருந்ததுடன் அங்கு மருந்துத் தொழிற்சாலை வெளி நோயாளர் சிகிச்சை நிலையம் (ஓ. பி. டி) ஆகியவை ஆரம்பிப்பதற்கும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்.

தமது சேவையின் திறமையின் மூலம் பின்னர் இவர் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகராகவிருந்து ஆயுள்வேத கல்லூரி, மருந்துத் தொழிற்சாலை, ஆஸ்பத்திரி ஆகியவற்றின் நிர்வாகசபையின் செயலாளராகவும் கடமையாற்றினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## க. சி. சண்முகரெத்தினம்

காலஞ்சென்ற டாக்டர் க. சி. சண்முகரெத்தினம் அவர்களின் அந்தியட்டி கிரியைகள், ஜூலை மாதம் 15-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் கீரிமலையிலும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை கீரிமலையிலுள்ள சிறுப்பர் மடத்திலும் நடைபெறும். மறுநாள் 16-ம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு டாக்டர் சண்முகரெத்தினம் அவர்களின் இல்லத்தில் (407, கே. கே. எஸ். வீதி, வண்ணை ) அந்தணர்க்கு தானம் வழங்குதலும், அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும், மாலை 5-00 மணிக்கு வண்ணை ஸ்ரீ ஞானவைரவர் கோவிலில் விசேஷ பூசையும், நினைவுப் பிரார்த்தனையும் நடைபெறும்.

க. சி. தங்கராசாவும், பர்வதவர்த்தனி சண்முகரெத்தினமும், பிள்ளைகளும், குடும்பத்தினரும் உறவினர்களையும், நண்பர்களையும்அமரத்துவமெய்தியசண்முகரெத்தினம் அவர்களோடு பலவழிகளாலும் தொடர்பு கொண்டவர்களையும் இந்தவைபவங்களில்கலந்துகொள்ளுமாறு அன்போடு அழைக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் அழைப்பு விடுக்க முடியாமையை இட்டு அவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றார்கள்.

407, கே. கே. எஸ். வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
12-7-66

654

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### கல்வி

**சிங்கள வகுப்புகள்**

பாலர் வகுப்புத் தொடக்கம் எஸ். எஸ். ஸி. வகுப்புவரை சிங்கள வகுப்புகள் நடாத்தப்படும். ஐக்கிய கலாசாலை, கரவெட்டி/107, பருத்தித்துறைவீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 741

**வகுப்புகள்**

கலை/ விஞ்ஞானம்/ வர்த்தகம்/3 மாத, 6 மாத, 1வருட சுருக்கெழுத்து - தட்டச்சு (தமிழ்/ஆங்கிலம்) க. பொ. த. (சாதாரணம் / உயர்தரம்) வகுப்புக்கள் நடக்கின்றன. சேர்ந்து படிக்கவும். (1) வர்த்தக கல்லூரி, பருத்தித்துறை. (2) வர்த்தகக் கல்லூரி, வதிரி, கரவெட்டி. 750

### காணவில்லை

**சூட்கேஸ்**

வட்டுக்கோட்டைச் சந்திக்கும் அராலி பாலத்துக்குமிடையில் காட்போட்பெட்டிக்குள் வைக்கப்பட்டு சூட்கேஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 745

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோச் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00 9-45'
போயா தினங்களில் 4 காட்சிகள்
**THE THREE MUSKETTEERS**
**மூன்று ஈட்டிவீரர்கள்**

---

# மங்கையர்திலகமாக . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மலேசியாச் சுற்றுலா தங்களுக்குப் பயனுள்ளதாக இருந்ததா?

பல பேரறிஞர்களைச் சந்திக்கும் வாய்ப்பினை மலேசியாப்பிரயாணம் அளித்தது. செல்வம் கொழிக்கும் சிறப்புடைய நாடாக மலேசியா மிளிர்கிறது. மக்கள் செழிப்பான வாழ்வு வாழ்கிறார்கள். விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்கின்றனர். பேரறிஞர் மு. வ. வின் பலநூல்களைப் படித்திருக்கிறேன். படிக்கும்போதே அவரைக்காண வேண்டும்; அவரோடு உரையாடவேண்டுமென்று விரும்பினேன். விரிவுரைச் சுற்றுலாவிற்கு பிறுங்வரை பேரறிஞர் மு. வ. திருவாளர்கள் தி. க. சண்முகம் எஸ். மகாராஜன், மா. சண்முக சுப்பிரமணியம், இராஜதுரை அருணாசலம் தம்பதிகள், சிறிஸ்கந்தராசா தம்பதிகள் ஆகியோருடன் எங்களையும் அனுப்பிவைத்தனர். அங்கு நடாத்திய சொற்பொழிவைக் கேட்ட பேரறிஞர் மு. வ. நீங்கள் ஒரு கட்டுரையை ஆராய்ச்சி மகாநாட்டிற்குச் சமர்ப்கத்திருக்கலாமே என்று கூறினார். ஈழப் பெண்மணிகள் சபைகளில் கூச்சமின்றிச் சொற்பொழிவுகள் சிறப்பாக நிகழ்த்தமாட்டார்கள் என்ற அபிப்பிராயம் வெளிநாட்டுத் தமிழறிஞர்கள் மத்தியில் நிலவுகிறது. சிறந்த சொற்பெருக்காற்றும் ஈழத்து நங்கையர்கள் உள்நாட்டில் மட்டுமன்றி மலேசியாத் தமிழாராய்ச்சி மகாநாடு போன்ற சர்வதேசக் கருத்தரங்குகளிலும் பங்கு கொண்டு இத் தப்பான அபிப்பிராயத்தை நீக்க வேண்டும். மலேசிய மகாநாட்டில் பல பெண்மணிகள் கலந்துகொண்டார்கள்.

உங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு சம்பவம்?

ஐம்பத்தெட்டாம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின்போது நடைபெற்ற சம்பவம் என்றுமே என்னல் மறக்கமுடியாது. இனக்கலவரத்தின்போது ஆறு மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தேன். நாலாம் மாதம் தாயார், சகோதரி ஆகியோர் ஒன்றரைவயதுள்ள தனது இளைய புதல்வனையும் அழைத்துவந்தனர், மூன்றுமாதங்களவரை காணுத எனது மழலைச்செல்வத்தை ஆசையோடு அணைத்தேன். ஆனல் அவன் என்னேடு வர மறுத்துவிட்டான். அப்பொழுது நான் அடைந்த வேதனைக்கு எல்லையில்லை. பத்துமாதம் சுமந்து பாடுபட்டுப் பெற்ற பச்சிளம் பாலன் தாயுடன் வர மறுப்பதைப் போல் கொடுமை உலகில் வேறு உண்டா.

நங்கையருக்கு உகந்த தொழில்கள் எவையென எண்ணுகிறீர்கள்? பலதுறைகளிலும் பெண்கள் ஈடுபட வேண்டுமென விரும்புகிறேன். அவர்களது சேவை நாட்டிற்கு இன்றியமையாதது. அவரவர் திறமைக்கேற்பப் பொறியியல், வைத்தியம், நுண்கலைகளில் விற்பன்னராகத் திகழவேண்டும். இன்றைய பொருளாதார விருத்திக்கு கைத்தொழில் வளர்ச்சி இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கின்றது. பல பெண்மணிகள் கைத்தொழிலுக்கு ஊக்கமளித்து நாட்டை வளம்படுத்த வேண்டும். மலேசியாவிலுள்ள சீனப் பெண்கள் விவசாயத் துறையில் கடனமாக உழைக்கிறார்கள். ஆண்களைவிட அல்லும் பகலும் உடல் உழைப்பை அந்நாட்டிற்கு நல்கும் அவர்கள்சேவை உலகப் பெண்களுக்கே ஒரு முன்மாதிரியாகும்,

நீங்கள் எதனை அதிகமாக வெறுக்கிறீர்கள்?

இன்று நம் சமுதாயத்தில் பலஇளம் சகோதரிகள் தொழிலுக்குச் செல்கிறார்கள். மற்றையோர் உழைத்திட உல்லாசமாக வீட்டில் உண்டுகளித்து உறங்கும் சில பெண்கள் அச்சகோதரிகளை அப்படி இப்படியென அவதூறுகப்பேசி தமது பொழுதை அவமே கழிக்கிறார்கள். இவர்கள் தம்பொழுதைமட்டும் வீணுக்காது தம் வறுமைப்பிணியைப் போக்கிட, பெற்றோர் சகோதரர்களை வாழவைத்திட, நாட்டை நலமுறச் செய்திடசெல்லும் நங்கையரின் மனத்தையல்லவோ நலியச்செய்கிறார்கள். இவர்கள் இப்பூமிக்குப் பாரம்போன்றவர்கள். இவர்களை நான் அடியோடு வெறுக்கிறேன்.

இளம் மங்கையர் பலர் எனக்கு எப்பொழுதும் ஒத்துழைப்பு அளித்துவருகின்றனர். இவர்கள் கிராமத்திற்குக்கிராமம் மாதர் சங்கங்கள் நிறுவவேண்டும். ஆண்டிற்கு ஒருகூட்டம்; ஒரு அறிக்கை என்றிராது அவ்வக்கிராமத்தில் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் போன்றவற்றை வளமாகப் பேண என்ன என்ன முறைகளைக் கையாளவேண்டும் என்று மாதர்சங்கங்கள் தீர்மானித்து நாளும் உழைத்திடவேண்டும், பெண்மணிகளின் குறைகள் பல இப்படியான மாதர் சங்கங்களால் நிவர்த்தி செய்யப்படுவதுடன் [illegible] பல நன்மைகள் ஏற்படுமல்லவா?

---

**REGAL—JAFFNA**
NOW SHOWING
JAMES STEWART
SANDRA DEE
in
**Take Her She's Mine**
(Cinemascope--Deluxe Color)

---

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தின சரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
**நாகேஷ் - கே. ஆர். விஜயா**
நடித்த
**சர்வர் சுந்தரம்**

---

## 3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)

பி. ப. 3, 6, 9-30 மணி

ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்...... எதற்கோ அழுதாள். ஆனல் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.

மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின் சிறுகதைதான்

ஆடலழகி **ஜெயலலிதா,**

புதுமுகம் **ஸ்ரீகாந்த்**

**நிர்மலா, மூர்த்தி, ஆஷா**

மற்றும் பலர் நடித்த
சித்ராலயா அளிக்கும்
ஸ்ரீதரின்

# "வெண்ணிற ஆடை"

(ஈஸ்ட்மன் கலர்)
இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

---

## விளம்பரம்

### மயிலிட்டிக் கிராமசபையின் கேள்வி விளம்பரம்

மயிலிட்டிக் கிராமசபைத் தலைவரால், மயிலிட்டி வடக்கு செபமாதா கோவில் ஒழுங்கைத் திருத்த வேலைக்கான கேள்விகள் 27-7-66-ம் திகதி காலை 9-30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள், ரூபா 25/-ம், கேள்விப்பத்திரச் செலவு ரூபா 5/-ம் கட்டி கிராமசபைக் கந்தோரில், 25-7-66-ம் திகதி பகல் 12 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கொண்டு இவ்வேலையைப் பற்றிய விபரங்கள் கிராமசபைக் கந்தோரில் வேலை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

சி. அருணசலம்,
தலைவர்,
கிராமசபை, மயிலிட்டி.
கிராமசபை அலுவலகம்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை,
11-7-66. 661

### மனேஜர் தேவை

பூநகரி, மறவகுறிச்சி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கப் பண்டசாலைக்கு மனேஜர் ஒருவர் தேவை.

1 வயது: 25க்கும் 35க்கும் உட்பட்டவர்.
2 தராதரம் G C.E.(O L)
3 கூட்டுறவுப் பயிற்சித் தராதரப் பத்திரமும் தேவை.
4 ஆறுமாதங்கட்குட் பெற்ற இருநற்சாட்சிப்பத்திரங்களுளொன்று தமது பகுதிக் காரியாதிகாரி அவர்களிடம் பெற்றதாதல் வேண்டும்.
5 உரொக்கப் பிணை 500 ரூபா; ஆதனப்பிணை 2000 ரூபா.
6 சகல படிகளுமுட்பட ஆரம்பசம்பளம் 75/-ரூபா.
7 31-7-66 க்குள் விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் தலைவருக்குஅனுப்பப் பெறல்வேண்டும்,

வை. வல்லிபுரம்
தலைவர்
செல்லியாதீவு.
பூநகரி
12-7-66 659

### மனேஜர் தேவை

கண்டாவளை ப. நோ, கூ. சங்கத்துக்கு மனேஜர் தேவை. 25 வயதுக்கு மேற்பட்டவராகவும் S.S.C. யில் அல்லது C. C E. ஒரேமுறையில் ஆறுபாடங்களில் சித்தி எய்தியவராகவும் சங்க அலுவல்களைத் தமிழில் நடாத்தக்கூடியவராகவும் ஆங்கில அறிவு உடையவராகவும் இருத்தல் வேண்டும். கூட்டுறவுப் பயிற்சி விரும்பத்தக்கது. ஆரம்ப சம்பளம் சகல படிகளுமுட்பட மாதம்ரூபா 125/-ஆனல் தராதரம், திறமை, அனுபவத்திற்கேற்ப ஆரம்பசம்பளம் 150/- ரூபாவாகஉயர்த்தப்படலாம்.

பிணை: காசுரொக்கம்ரூபா 1000/- ஆதனம் ரூபா 2000/- சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 28-7-66 க்கு முன் பதிவுத்தபால்மூலம் "காரியதரிசி, 218-220 காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்" என்று விலாசமிட்டு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். 660

### தேவை

1,00,000 "சி" தர சாக்குகள் தேவை. விபரத்துக்குக் கீழ்க்காணும் விலாசத்துக்கு 30-7-66-க்கு முன்னர் காரியாலய நேரத்தில் காரியதரிசியுடன்தொடர்புகொள்ளவும்.

காரியதரிசி
வ. ப. வி. உ. கூ. சமாஜம்,
111. பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
662

### ஏலவிற்பனவு

முல்லைத்தீவு பல. நோ. கூ. சமாஜத்தின் பழைய கட்டிடப்பொருட்கள் (பாவனைக்குகந்த தகரங்கள் உட்பட) 19-7-66 காலை 10மணிக்கு சமாஜத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

வே. விஜயரத்தினம்,
காரியதரிசி
664

**வியாபாரம் பெருக விளம்பரம்செய்க**

---

# "தமிழ் மாணவர்களின் வளர்ச்சிக்குத் தடையா?

## வன்மையாக எதிர்ப்போம் என்கிறார் கம்யூனிஸ்ட் பிரமுகர்

உடுப்பிட்டி, புதன்

"பல்கலைக்கழகத்தில் இடமில்லை, பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவரும் மாணவர்க்கு வேலைவாய்ப்புஇல்லையென்ற சாக்குப்போக்குச் சொல்லி இன்றைய அரசாங்கம் பல்கலைக்கழகத்திற்குப் புகுவோரை மூன்றில் ஒரு பகுதியாகக் குறைப்பதற்கு யோசனை செய்வதாகத்தெரிகிறது. இந்த யோசனையை நாம் பலமாக எதிர்க்க வேண்டும். தமிழ் மாணவர்களின் வளர்ச்சிக்குத் தடையாகக் கொண்டுவரும் எந்த ஒரு திட்டத்தையும் நாம் வன்மையாக எதிர்ப்போம்" சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். பிரதேச அமைப்பாளர் திரு. வீ. ஏ. கந்தசாமி உடுப்பிட்டியில் நடைபெற்ற உடுப்பிட்டி, வல்வெட்டி, கம்பர்மலை கம்யூனிஸ்ட் கூட்டு வாலிபமுன்னணியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. ஏ. வீரசிங்கம், உபதலைவர்: திரு. கே. அழகையா, செயலாளர்: திரு. என். நடேசன், உபசெயலாளர்: திரு. எஸ். அண்ணாத்துரை, தனாதிகாரி: திரு. ஜீ. தவராசா. நிர்வாகக்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## இன்னமும் கமிஷன் கிடைக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடமையாற்றும் கட்டுப்பாட்டு உத்தியோகஸ்தர்களுக்குக் கடந்தமூன்று மாத காலமாக கிடைக்க வேண்டிய கமிஷன் இன்னமும் கிடைக்கவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபையில் கடமையாற்றும் இந்த 9 உத்தியோகத்தர்களும் கடந்த ஒரு மாதகாலத்துள் சுமார் ஒரு லட்சம் ரூபா வரையான பாக்கி வரியை அறவிட்டதாக அறியப்படுகிறது.

தாம் இவ்விதம் துரிதமாகக் கடமையாற்றியும் தமக்குக்கிடைக்கவேண்டிய கமிஷன் இதுவரை கிடைக்காதது குறித்து இவர்கள்கவலை கொண்டுள்ளார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வியட்னும் சமாதான மகாநாட்டுக்கு முன்

# தென்கிழக்காசியா நடுநிலைப் பகுதியாக மாற்றப்பட வேண்டும்"

# அந்நியத் தலையீடுநிற்க பிரெஞ்சு அதிபர் டிகால் யோசனை

## உலகத் தலைவர்களின் பல்வேறு நடவடிக்கைகள்:

பாரிஸ், ஜூலை 13

வியட்னும் சம்பந்தமான சர்வதேச மகாநாடு ஒன்று நடத்தப்படுமுன், தென்கிழக்காசியா நடுநிலைமைப் பகுதியாக்கப்படவேண்டுமென்றும் பெரிய வல்லரசுகள் இதற்கு உத்தரவாதம் அளிக்கவேண் மென்றும் பிரெஞ்சுஅதிபர் டிகால் வற்புறுத்தியுள்ளார்.

தென்கிழக்காசியாவில் வெளியாரின் தலையீடு நிற்கவேண்டும் எனக் கூறிய டிகால், வியட்னுமில் சமாதானத்தை ஏற்படுத்தும் பயனுள்ள பேச்சுக்களில் கலந்து கொள்ள பிரான்ஸ் தயாராய் இருக்கிறது என்றும் கூறினர்.

### இந்திரா காந்தி

மாஸ்கோவில் இந்தியப் பிரதம மந்திரி ஸ்ரீமதி காந்தியும், ரஷ்யப் பிரதமர் திரு கோஸிஜினும் இன்று வியட்னும் பற்றி தீவிரமான ஆலோசனையில் இறங்கியதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. ஸ்ரீமதி காந்தியின் புதிய யோசனைகள் குறித்து அவர்கள் ஆராய்ந்தார்கள்.

ஜனதிபதிகள் நாஸர், டிட்டோ ஆகியோருடன் நடத்திய சம்பாஷணைகள் குறித்து கோஸிஜின் விபரங்கள் கேட்டறிந்ததாயும் கூறப்பட்டது.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளுக்கானஸ்ரீமதி காந்தியின் விஜயம் உத்தியோகபூர்வமானதல்ல. ஆனல் ரஷ்யாவுக்கு உத்தியோகரீதியில் அவர் வந்திருப்பதால் தீவிரமானமுறையில் பேசுக்கள் இடம்பெறும் என அறிவிக்கப்படுகிறது. கூட்டறிக்கை வெளியிடப்படுமுன் ஸ்ரீமதி காந்தி சோவியத் பிரதமருடன் 4 தடவைகள் ஆலோசனை நடத்துவாரெனத் தெரிகிறது.

### ஜனதிபதிஜோன்ஸன்

அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் மேற்கு வர்ஜீனியாவில் பேசிய போது, ஆக்கிரமிப்பினுல் அதிகச் சேதமே ஏற்படுமென்பதை வட வியட்னும் உணரும் வரையும், சமாதானப் பேச்சுக்கு அவர்கள் முன்வரும் வரையம் அமெரிக்கத் துருப்புக்கள் வியட்னுமில் தொடர்ந்து இருக்குமென்ருர்.

ஆசியாவில் அமைதிநிலவ சீனுவில் அமைதி ஏற்பட வேண்டியது அவசியம். சீனுவுடன் இதுபற்றிப் பேச அமெரிக்கா தயாராய் இருக்கிறதென்றும் திரு. ஜோன்ஸன் கூறினுர்.

வடவியட்னும் தலைவர்கள் பலாத்கார மூலம் ராணுவ வெற்றிபெறகனவிலும்கருத முடியாது என்றும் திரு' ஜோன்ஸன் குறிப்பிட்டார். 'வியட்னுமில் திடமான யுத்தத்தைநடத்த அமெரிக்கா உறுதிபூண்டிருக்கிறது. நீண்டகாலம் இது நடக்கலாம்' என்றும்அவர்கூறினுர். வியட்னும் பிரச்னையைத் தீர்ப்பதில் ரஷ்யா உருவான முயற்சி எதையும் மேற்கொள்ள மறுத்துவருகிறது என்றும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

### பிரிட்டிஷ் பிரதமர் வில்சன்

லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனும், ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ஹோல்டும் வியட்னும் குறித்து நேற்றுபேச்சு நடத்தினர்

தூரகிழக்கு அடுத்த 10 ஆண்டுகளில் உலகின் கொந்தளிப்புப் பகுதிகளாக இருக்குமாதலால், தென்கிழக்காசியாவில் பிரிட்டன் தனது ராணுவப் பொறுப்புகளை இப்போது கைவிடாதெனத் திரு. வில்சன் பேச்சுக்குப்பின் குறிப்பிட்டார் இந்தோனேஷியா தனது மலேஸிய எதிர்ப்பை நிறுத்திக்கொண்டபோதிலும் பிரிட்டிஷ் துருப்புக்கள் சிங்கப்பூர், மலேஸியப் பகுதிகளில் தொடர்ந்து இருக்கும் என்ருர் அவர். தாம் ரஷ்ய, அமெரிக்கத் தலைவர்களுடன் வியட்னும் குறித்து பேசப் போவதாயும் அவர் தெரிவித்தார்.

### ஆஸி பிரதமர் ஹோல்ட்

ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ஹோல்ட் மீண்டும் ஜனதிபதி ஜோன்ஸனைச் சந்தித்துப் பேசப் போவதாய்க் கூறினுர். திரு. ஜோன்ஸனுடன் தாம் நடத்திய பேச்சுகளுக்குப்பின், மீண்டும் தம்மை மச்சந்திக்கவிருப்பதாகத் திரு. ஜோன்ஸன் கேட்டுக் கொண்டார் எனஅவர் தெரிவித்தார். வில்சனின் உத்தேச மாஸ்கோ விஜயத்தை திரு. ஜோன்ஸன் வரவேற்பதாயும் ஆஸ்திரேலியப்பிரதமர் குறிப்பிட்டார்.

### சீன வெளிஉறவு மந்திரி சென்யீ

வியட்னும் சமாதானம் சம்பந்தமான ஸ்ரீமதி இந்திரா காந்தியின் சமாதான யோசனைகளை சீன வெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென்யீ கண்டித்துள்ளார். ஸ்ரீமதி காந்தியின் திட்டம் வியட்னுமில் அமெரிக்கப் படைகள் நீடிக்க வழிசெய்கிறதென்றும். அமெரிக்கா வியட்னுமிலிருந்து வாபஸ் பெருவிடின் அங்கு சமாதானம் ஒருபோதும் சாத்தியமில்லை என்றும் அவர் கூறினுர்.

"வருங்காலத்தில் அமெரிக்காவும், ரஷ்யாவும் சீன...

(5-ம் கலம் பார்க்க)

### உலக கப்

லண்டன், ஜூலை 13

நேற்று லண்டன் வெம்பிளி ஸ்டேடியத்தில் நடைபெற்ற உலக உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணத்துக்கான போட்டியில், உலகசாம்பியன் பிரேஸில், பல்கேரியாவை 2—0 கோல்களால் தோற்கடித்தது.

மேற்கு ஜெர்மனி, சுவிட்ஸர்லாந்தை 5 - 0 கோல்களால் தோற்கடித்தது.

ரஷ்யா, வடகொரியாவை 3—0 கோல்களால் தோற்கடித்தது.

### கள்ள குடியேற்றக் காரர்கள் கைது

சென்னை, ஜூலை 13

ஐந்து திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட்டதன் விளைவாக இலங்கைக்கு கள்ளத்தனமாக குடியேற முயன்ற 23 பேரும், 2 தரகர்களும் கைதுசெய்யப்பட்டனர் என சென்னை அரசாங்க அறிவிப்பொன்று கூறியது.

இம்மாதம் கள்ளத்தனமாகக் குடியேறியதாக இலங்கை அரசாங்கம் திருப்பியனுப்பிய 171 பேர்கள் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர். பி. டி. ஐ.

### ஸாம்பியா விலகும்

லண்டன், ஜூலை 13

ரொடீஷியா விஷயத்தில் பிரிட்டன் சரியான நடவடிக்கைஎடுத்துக்கொள்ளாவிட்டால், ஸாம்பியா காமன்வெல்த்திலிருந்து விலகுவது குறித்து ஆலோசிக்கும் என பிரதமர் கவுண்டா அறிவித்தார்.

### உளவாளி கைது

வாஷிங்டன், ஜூலை 13

ஒய்வுபெற்ற முன்னுள் அமெரிக்க ராணுவ கேர்னல் ஒருவர், ரஷ்யாவுக்கு உளவு வேலை செய்தது காரணமாகக் கைதுசெய்யப்பட்டிருக்கிருர்.

### போர்மோஸாவுக்கு அங்கீகாரம்

பிளாண்டபர், ஜூலை 13

மலாவி, போர்மோஸாவை அங்கீகரித்திருக்கிறது. இன்று முதல் இரு நாடுகளுக்குமிடையே தூதுறவுகள் ஸ்தாபிக்கப்பட்டன.

தண்ணீர் பற்றுக்குறையால்

## கைத்தொழில் ஸ்தாபனங்களை ஒருநாள் மூடஉத்தரவு

### பம்பாய் நகரைக் காலிசெய்ய திட்டங்கள் தயார்!

பம்பாய், ஜூலை 13

45 லட்சம் மக்கள் கொண்ட பம்பாய் நகர், எந்நேரமும் காலி செய்யப்படுவதற்கான திட்டங்களை மகாராஷ்டிர அரசாங்கம் தயாரித்து முடித்திருக்கிறது.

பம்பாயில் கடந்த சில தினங்களாக மழை இல்லாததால் நகரில் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. அடுத்த 3 தினங்களுக்கு மழைவருவதற்குகான அறிகுறியும் தென்படவில்லை.

பம்பாயிலுள்ள சகல கைத்தொழில் ஸ்தாபனங்களும், மராமத்து வேலைகளையும் இன்று மூடும்படி அரசாங்கம் உத்தரவிட்டது. தண்ணீரைச் சேமிக்கும் முயற்சியாக இந்தஉத்தரவு விடுக்கப்பட்டது. சொந்த தண்ணீரைச் சேகரிப்பிலிருந்துகூட இன்றைய தினம் இந்த அலுவல்களுக்குத் தண்ணீர் எடுக்கக்கூடாது என்பது உத்தரவு. அரசாங்க ஸ்தாபனங்கள் மட்டும் விதிவிலக்குக்கு உள்ளாகியிருக்கின்றன.

செயற்கை முறையில் மேகங்களைக் கலைத்துமழையைக் கொண்டுவர முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

முதல் மந்திரி திரு. நாய்க் நேற்று வானெலி மூலம் விடுத்த ஒரு வேண்டுகோளில் தற்போதைய நிலையில் மக்கள் அமைதியாகவும், தைரியமுடனும் இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

உ. பி. யில்

## துப்பாக்கி பிரயோகத்தில் ஐவர் பலி; 60 பேர் காயம்

### 2000க்கு மேலானேர் கைது

லக்னே, ஜூலை 13

உத்தர பிரதேசத்திலுள்ள பாண்டாவில் விலைவாசி உயர்வையும், வரிகளையும் எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டம் காரணமாகப் பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் 5 பேர் மாண்டனர். 60 பேர் காயமடைந்தனர்.

பல இடங்களில் கல்வீச்சுக்கும், ரயிலை நிறுத்தும் முயற்சிகளும், தண்டவாளங்களை அகற்றும் முயற்சிகளும் இடம்பெற்றன.

2000க்கு மேற்பட்டோர் இதுவரை கைதுசெய்யப்பட்டிருக்கிருர்கள்.

காயம் அடைந்தவர்களில் நகர மாஜிஸ்திரேட், பொலிஸ் சுப்பிரிண்டன் உட்படப் பலர் இருக்கிருர்கள்.

நேற்றைய பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தை எதிர்த்துப் பொதுவேலை நிறுத்தம் ஆரம்பிக்குமாறு இடதுசாரிக்கட்சிகள் கேட்டுக்கொண்டுள்ளன.

### நில அதிர்ச்சி; 15 பேர் பலி

அங்காரா, ஜூலை 13

துருக்கியில் ஏற்பட்ட நில அதிர்ச்சி காரணமாக 15 பேர் மாண்டனர். 50 கிராமங்கள் நாசமாகின. 1000க்கு மேற்பட்ட வீடுகள் அழிந்தன.

### மாஸேதுங்

பீகிங், ஜூலை 13

சீனத் தலைவர் மாஸேதுங் நேபாள முடிக்குரிய இளவரசரை ஷாங்கை நகரில் சந்தித்ததாக அறிவிக்கப்படுகிறது.

### பாகிஸ்தான் நிதிமந்திரி

ராவல்பிண்டி, ஜூலை 13

பாகிஸ்தானின் புதிய நிதிமந்திரியாக திரு. உகாலி பதவி ஏற்பார் என அறிவிக்கப்பட்டது.

### கந்தபுராண படலம்

சுழிபுரம், புதன்

மாதகல் நுணசை முருகமூர்த்திகோயில் கந்தபுராணப்படல பூர்த்திவிழாவும் பெரியபூசையும் இம்மாதம் 18-ந் திகதி நடைபெறவிருக்கிறது. அன்று பகல் விசேஷ அபிஷேக ஆராதனையும் மகேஸ்வர பூசையும் நடைபெறும். இரவு வள்ளியம்மை திருமணபுராணபடலமுஇடம்பெறும்.

### நகை திருட்டு

பரந்தன், புதன்

பரந்தன் கிராம சேவையாளர் பகுதியைச் சேர்ந்த குமரபுரம் வாசியான வல்லிபுரம் கனகம்மா என்பவரது வீட்டில் இரவு நேரத்தின்போது வீட்டின் முன்புறப்பகுதியால் திருடர்கள் நுழைந்து சுமார் 50 தங்கப் பவுண் எடையுள்ள நகைகளைத் திருடிச் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பொலிஸார் இதுபற்றி விசாரணை செய்து வருகின்றனர்.

(2-ம் கலத் தொடர்ச்சி)

மீது போர் தொடுக்கப் போகின்றன. பீகிங், ஷாங்காய் நகர்கள் அழிந்தாலும், இரு நாடுகளையும் சீனு தோற்கடிப்பது உறுதி. அமெரிக்காவும் ரஷ்யாவும் சீனுவை தனியாகப் பிரிக்க முயல்கின்றன. இந்த இருவல்லரசு சதிகளில் இந்தியவும் கூடசேர்நதிருக்கிறது" என்ருர் சென்யீ

இப்போது தென்வியட்னுமில் 3,50,000 அமெரிக்கத் துருப்புக்கள் இருப்பதாக வடவியட்னும் கூறியுள்ளது. தென்வியட்னுமில் இதுவரை 175 ஹெலிகொப்டர் விமானங்கள் சுடப்பட்டிருக்கின்றனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

''மலையின் உச்சியையும் ஆழ்கடலின் ஆழத்தையும் காண்பதற்கு மேன் நாட்டினர் எவ்வளவு ஊக்கமெடுக்கிறார்கள். சிலர் உயிரையே தியாகம் செய்கிறார்கள். நாம் ஞான நூல்களைக் கற்பதற்கு ஒருபிறவியைக் கொடுத்தாலென்ன?''

—''இலக்கணச் சுவாமிகள்''


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams: EELANADU Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆனி மீ 30 உ (14-7-66)


## மாணவர் ''படுகொலை''

சென்ற 1965-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற இலங்கை சர்வகலாசாலைகளுக்கான பிரவேசப் பரீட்சை (ஜி. ஸி. ஈ. அட்வான்ஸ்) முடிவுகள் பல கல்லூரிகளுக்கும் நேற்று அனுப்பப்பட்டுள்ளன. இதில் சித்தி பெற்றவர்கள் எண்ணிக்கை எவ்வளவாயினும், மூன்று பல்கலைக்கழகங்களும் சுமார் 3500 மாணவர்களை மட்டுமே சேர்த்துக்கொள்ளுமென்றும் அவ்வளவுபேருக்கே இடமிருப்பதாயும் ஒருசெய்தி தெரிவிக்கின்றது. அதாவது நூற்றுக்குத் தொண்ணூறு வீத மாணவர்கள் ''படுகொலை'' செய்யப்படுவார்கள். இது உண்மையாயின் இதைவிட நம் மாணவர்களுக்குச் செய்யும் பெரிய அநியாயம் வேறுஇருக்க முடியாது.

தலைக்குத் தகுந்த குல்லாவா? குல்லாவுக்குத் தகுந்த தலையா என்று ஒரு கதையுண்டு. அதாவது குல்லா சிறிதாகஇருக்கும் காரணத்தால், ஒருவனின் தலையை அதற்குத் தக்கபடி சீவி விட்டனராம்! அப்படியுள்ளது இங்கு இவ்விஷயம் பற்றிய நிலைமையும் பரீட்சையிலே மாணவர்கள் சித்தி பெற்றிருப்பினும் சர்வகலாசாலையில் இடமில்லையென்ற காரணத்தால்சித்தி பெற்றவர்களிலும் பெரும்பான்மையோரைச்சர்வகலாசாலைக்குச் செல்லாமல்தடுப்பது எவ்விதமும்நேர்மையாகாது.

அண்டையிலேயுள்ள சென்னையில் பல பல கல்லூரிகளிலும் சர்வகலாசாலை வகுப்புகளைநடத்துவதுடன், சில இடங்களிலே வெளியார்களும் பட்டப்பரீட்சைகளுக்குப் படிக்க மாலை வகுப்புக்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதாவது உயர் கல்வி பயிற்சி தகுதியுள்ளவர்கள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக செய்யப் பெற்றுள்ளது. ஆனால் நம் இலங்கையிலோ, மாணவர்களுக்குத் தகுதியிருந்தும், அரசாங்கம் போதிய வசதிகளைச்செய்து கொடுக்காத குற்றத்துக்காக, மாணவர்களை உயர்கல்வி கற்காதபடி தடுத்து தண்டிக்கின்றனர். இதனால்மாணவர்களில் பலர் மனமுடைந்து வேதனைப்படுவதைப்பார்க்கிறோம். அரசாங்கம் இந்தப் பெரும் பாவத்தை எவ்வளவு காலம் செய்து கொண்டிருக்கப்போகிறது?

இந்தக்கொடுமையிலிருந்து தப்ப, மாணவர்களில் பலர் இந்தியா முதலிய வெளிநாடுகளுக்குச் சென்று 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்றபடி மேல்படிப்புப்படிக்க பகீரதப் பிரயத்தினம் செய்கின்றனர். ஆனால் 'செலாவணி இல்லை' என்று காரணம் சொல்லி அதற்கும் மாணவர்களுக்கு அனுமதி அளிப்பதில்லை. இது எவ்வளவு பெரிய இம்சை என்பதையும் இதனால் நாட்டுக்கு எவ்வளவு தீங்கு என்பதையும் அரசாங்கமும் அரசாங்கக் கட்சியினரும் சிந்திக்க வேண்டும். மக்களிடையே பெருகும் அதிருப்தி, அரசாங்கத்தின் பலத்தைக் குலைக்குமாதலால், இதற்கானபரிகாரத்தை கூடிய சீக்கிரம் செய்து நம் மாணவர்களுக்கு நியாயம்வழங்க வேண்டும்.

சர்வகலாசாலைகளில் இடமில்லாவிடில், முதல் வருடப்படிப்பை ஆங்காங்கேபல தகுதிவாய்ந்த கல்லூரிகளிலும் அளிக்கச் செய்யலாமென்றும் இதனால் சர்வகலாசாலைப் பயிற்சியை அதிக மாணவர்கள் பெற முடிவதாக இருக்குமென்றும் ஒரு நல்ல யோசனை கூறப்படுகின்றது. தமிழ்பேசும்பகுதிகளில் சர்வகலாசாலை அமைக்கப் பட்டிருப்பின் இந்தப் பிரச்னை ஓரளவு தீர்ந்திருக்கும் எப்படியும் இலவசக் கல்வி காரணமாக, உயர்தரக் கல்வி பெற ஏராள்மான மாணவர்கள் தகுதியுடன் முன்வருவதால், அவர்களுக்கு இதற்கானவேண்டிய வசதிகளைக் கூடிய விரைவில் அளிக்கவேண்டியது அரசாங்கத்தின் அவசரக்கடமையாகும். எக்காரணம் பற்றியும் தங்கள் தவறுக்காகஅரசாங்கம் மாணவர்களைத் தண்டிக்கப்படாது.

## 'முதலில் பொதுமக்கள்'

பொதுமக்களின் நன்மையையே வர்த்தகர்கள் முதன்மையாகக் கருத வேண்டுமென்று அரசாங்க அமைச்சரும், ஸ்தலஸ்தாபன அமைச்சரும் கொழும்பிலே இலங்கை வம்சாவளி வர்த்தகர் சங்க வருடாந்தக்கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தனர். இந்த யோசனையின் படி வர்த்தகர்கள் நடப்பதாயின், பொது மக்களின் வாழ்க்கைச் செலவுகள் வெகுவாகக் குறைந்து, அரசாங்கத்தின் தலையிடியும் பெரிதும் குறையும்.

ஆனால் பொதுவாகச் சுயலாபமே வர்த்தகர்களின் முக்கிய நோக்கமாக இருக்கிறதேயன்றி, மக்களின் நன்மையை வள்ளுவர் கூறியதுபோல் தங்கள் நன்மையாகக் கருதி வர்த்தகம் செய்பவர்கள் மிகமிக அரிது. இலங்கையில் மட்டுமல்ல, உலகில் எங்குமே அநேகமாக இப்படித்தான். இக்காரணம் பற்றியே, தனியார் வர்த்தகம் கூடாதென்றும் அரசாங்கப் பொறுப்பிலேயே வர்த்தகம் கைத்தொழில் எல்லாம் நடக்கவேண்டுமென்றும் கம்யூனிஸ சித்தாந்தம் வற்புறுத்துகின்றது. மனிதனுக்கு ஆசை இருப்பது இயற்கை. ஆனால் பேராசை கூடாது பேராசை பெருநஷ்டத்தில்தான் முடியும். வர்த்தகத்திலே அரசாங்கம் அதிக கட்டுப்பாடுகளைச் செய்வதால், லஞ்ச ஊழல்கள் பெருகி, கள்ள மார்க்கெட்டுகள் அதிகரிப்பது பகிரங்க ரகசியம். கட்டுப்பாடுகள் எவ்வளவுக்கெவ்வளவு தளர்ந்து, சுதந்திர வர்த்தகம் ஏற்படுகின்றதோ அவ்வளவும் நியாயமான விலைக்கு, திறமான பொருட்கள் பொதுமக்களுக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும். வர்த்தகர்களிடையே அதிக சங்கங்கள் இருப்பதை அரசாங்க அமைச்சர் மறைமுகமாகக் கண்டித்தார். வர்த்தகர்கள் பிளவு பட்டிராமல், ஒற்றுமையாக இருந்து மக்களின் நன்மையை முக்கியமாகக் கருதுவதாயின், அது தீர்க்கதரிசனமாவதுடன் பொதுமக்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் பெறவும், சுதந்திர வர்த்தகம் ஓங்குவதற்கும், நாடும் [illegible] இருக்கும்.

# தமிழில் சுருக்கெழுத்து

— வே. வா. வேலுப்பிள்ளை

இன்று எமது இலங்கைத் தீவில் தமிழ், ஆங்கிலம், சிங்கள சுருக்கெழுத்து முறைகளில் பல முறைகள் இருக்கின்றன. ஆனால் ஏதாவது ஒரு சுருக்கெழுந்து முறை மூன்று மொழிகளுக்கும் பொதுவாக இருக்கின்றதா என்று நாம் ஆராய்ந்தால் 'பிட்மன்'முறையைத் தவிர வேறு இல்லை. ஆனால்சுப்பிரமணியம்முறை தமிழில் மட்டுமே இருக்கின்றது. ஆகவே சுப்பிரமணியம் முறையைத் தமிழில் படித்தால் ஆங்கிலத்தில் படிப்பதானால் ''பிட்மன்'' முறையைத்தான் கைக்கொள்ள வேண்டும். நாம்சுருக்கெழுத்தைபற்றிச் சொல்லவேண்டுமானால் நமக்கு தமிழ் ஆங்கில சுருக்கெழுத்துக்களில் ஆழ்ந்தஅறிவு இருக்கிறதா என்று முதலில் யோசித்துக்கொண்டே எழுதவேண்டும். பிட்மன் சுருக்கெழுத்துமுறையையும் சுப்பிரமணியம் சுருக்கெழுத்து முறையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பிட்மன் தமிழ் சுருக்கெழுத்தில் ஒருநிமிடத்துக்கு 80,90 சொற்களும், சுப்பிரமணியம் முறையில் 50,60 சொற்களும் மட்டுமே எழுதலாம். ஏனெனில் பிட்மன் சுருக்கெழுத்து முறையில் அனேக ஐக்கியக் குறிச்சொற்கள் இருக்கின்றன, அத்தோடு பிட்மன் தமிழ், ஆங்கில, சிங்கள சுருக்கெழுத்துமுறைகளில் ஒற்றுமை இருப்பதினால் தமிழ்ச் சுருக்கெழுத்தைப்படித்தால் தொடர்ந்து ஆங்கிலம் சிங்களம் ஆகிய மொழிகளிலும் வெகு இலகுவாகப் படித்துவிடலாம். இன்றைய அரசியல் சூழ்நிலையிலே தமிழ் சுருக்கெழுத்து தட்டெழுத்தாளரை உத்தியோகத்துக்குத் தேர்ந்தெடுக்கும்போது ஆங்கிலச் சுருக்கெழுத்துத் திட்டச்சும் தெரிந்திருக்க வேண்டுமெனக் கேட்கிறார்கள். பிட்மன் ஆங்கிலச் சுருக்கெழுத்து முறையைத் தழுவி தமிழில் ஸ்ரீநிவாசராவ் என்பவர் 50வருடங்களுக்கு முன்னும், நாணயக்காரா என்பவர் சிங்களத்திலும் சுருக்கெழுத்துக்களை எழுதியுள்ளார்கள். சுப்பிரமணியம் என்பவர் ஸ்லோவன்என்னும் ஆங்கிலச்சுருக்கெழுத்து முறையைத்தழுவி தமிழில் சுருக்கெழுத்தை எழுதினார், ஆனால் ஸ்லோவன் என்னும்ஆங்கிலச்சுருக்கெழுத்து கற்பிப்பாரற்றுச் சிதைந்து விட்டது. பிட்மன் சுருக்கெழுத்து மேலோங்கிவளர்ந்துகொண்டிருக்கிறது.

## 'ஆச்சிரமம் நிறுவுவதே மறைந்த பெரியாருக்குநாம் செய்யும்கைமாறு'

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் ஸ்ரீ ராமகிருஷ்ண சபையின் நிர்வாகசபைக் கூட்டம் தலைவர் டாக்டர் வ. த. பசுபதி தலைமையில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலையில் நடைபெற்றது.

தலைவர் சபையின் இணைக் காரியதரிசிகளிலொருவரான டாக்டர் க. சி. சண்முகரத்தினத்தின் அகால மரணத்தைக் குறித்து தமது அனுதாபத்தை தெரிவித்துப் பேசுகையில் டாக்டர் ஆற்றிய தொண்டுகளைப் பற்றியும் குறிப்பிட்டார்.

சபையின் முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிய உதவிகளை தலைவர் தெரிவித்ததோடு ஸ்ரீராமகிருஷ்ண சபைக்கு ஆச்சிரமம் நிறுவுவதற்கு ஓர் இடத்தைத்தேடுவதில் அவர் செய்த உதவிகளையும் குறிப்பிட்டு அவரின் நினைவை மனத்தில் நிலவும் பொருட்டு அந்த ஆச்சிரமத்தை நிறுவுவதே சிறந்த ஞாபகச் சின்னமாக அமையுமென்றார். இத்திடீர் பிரிவினால் மனமுடைந்திருக்கும் மனைவி மக்களுக்கும், சகோதரகளுக்கும்சபையின் அனுதாபத்தைத் தெரிவிப்பதென்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மறைந்த பெரியாருக்கு அஞ்சலிசெலுத்து முகமாக கூட்டத்தில் இரண்டு நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## தாய் இரத்தம் விற்க குழந்தைகள் மாண்டன

மியாமி, ஜூலை 13

திருமதி ஜெரால்டின் அயூக் தனது காரில் தனது குழந்தைகள் மூவரையும் விட்டுவிட்டு, ஒரு பைண்ட் இரத்தத்தை ரூபாய் 50-க்கு விற்பதற்காக ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தார். அங்கிருந்து அவர் திரும்பிவர இரண்டு மணித்தியாலம் தாமதமாகிவிட்டது

காரின் ஜன்னல்களியாவும் மூடப்பட்டிருந்தன. காருக்கு வெளியே 90 டிகிரி வெப்பமும், உள்ளே 130 டிகிரியும், உள்ளே மூன்று குழந்தைகளும் இருந்தனர். ஜோசப் 18 மாதம், பாபரா 34 மாதம், ஜேம்ஸ் நாலரை வருடம்.

இரத்தம் விற்றுவிட்டுத் திரும்பிய தாயை குழந்தைகளின் சடலங்களே வரவேற்றன. வெப்ப மிகுதியால் மூச்சுத்திணறி மூன்று குழந்தைகளும் மாய்ந்துவிட்டன.

## இங்கே விறகில்லை

சங்கானை, புதன்.

சங்கானை பட்டினசபை எல்லைக்குள்ளிருக்கும் வன பரிபாலன இலாகா விற்பனவு நிலையத்தில் சிலநாட்களாக விறகு விற்பனவு மந்த நிலையை அடைந்துள்ளது. சென்ற இருதினங்களாக விற்பனைக்கு விறகே இல்லை.

விறகு வினியோகக் கொந்திருத்து எடுத்தவர்களின் அசிரத்தையும் வன பரிபாலனக்கந்தோர் மேலதிகாரிகளின் கவனக்குறைவுமே இதற்குரிய காரணமெனத் தெரிய வருகிறது. இதனால் பொது மக்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்'

# களத்துமேடு

நெற்பயிரைத் தாக்கும் சந்துப் புழுவை அழிப்பதற்கு சில வருடங்களுக்கு முன்பு ஒருவகை மருந்தை உபயோகித்தார்கள். முதலில் அம் மருந்து நல்ல பலனையளித்தது. காலம் போகப்போக சந்துப் புழுவுக்கு அம் மருந்து பழக்கப் பட்டுவிட்டது. எவ்வளவு மருந்தை அடித்தாலும் அது 'கம்'மென்று பேசாமல் இருக்கும். எனவே அதைக் கொல்வதற்கு வேறொரு புதிய மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டி நேரிட்டது. இப்படியே தான் இதர பயிர்வகைகளைத் தாக்கும் பூச்சி புழுக்களும் மருந்துகளை எதிர்க்கும் சக்தியைப் பெற்றவுடனே வேறு புதிய மருந்துகள் கண்டுபிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது.

இவ்விதமான பரிசோதனைகள் அரசாங்கப் பண்ணைகளிலுள்ள ஆராய்ச்சிநிலையங்களில் நடைபெறுகின்றன.

களிமண் பூமி, மணற்பூமி முதலிய எல்லாவகை நிலத்தையும் இலகுவில் உழக்கூடிய நான்கு சில்லு டிராக்டர்களும், ஒருவர் தமது இரு கைகளாலும் பிடித்து உழக்கூடிய சிறிய டிராக்டர்களும், விதைத்தல், உழுதல், புல்லரிதல், மரமரிதல் முதலிய பல வகைத் தொழில்களையும் செய்யக்கூடிய நவீன யந்திர சாதனங்களும் நம் நாட்டில் இருக்கின்றன. இவைகளும் மேற்கூறப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளும் சாதாரண கமக்காரருக்கு உடனுக்குடனே கிடைக்கக் கூடிய வசதிகள் இலங்கையில் இல்லையென்றே கூற வேண்டும்.

விவசாயப் பகுதியினரால் வெளியிடப்படும் 'கமத்தொழில் விளக்கம்' முதலிய சஞ்சிகைகளும் துண்டுப்பிரசுரங்களும் மேற்கூறிய பண்ணைகளிலும் அரசாங்க கந்தோர்களிலும் காணப்படுகின்றனவேயன்றி வயல்களில் பாடுபடும் உழவர்களுக்குக் கிடைப்பதாகத் தெரியவில்லை.

உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், மிளகாய் முதலிய பல பொருட்களில் இலங்கை இன்னும் தன்னிறைவு காணவில்லை. இந்தக் குறைவைத் தீர்க்கும் முகமாகவும் பலவித திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. மேலும் முந்திரிக்கொட்டை, நிலக்கடலை முதலிய காசுப் பயிர்களை உற்பத்திசெய்வதற்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் ஒதுக்கப்பட்டு ஆராய்ச்சிகளும் நடந்துவருகின்றன.

இந்த முயற்சிகள் எல்லாவற்றிலும் கதாநாயகன் போன்றிருப்பவன் அவற்றை நடைமுறையில் செய்ய வேண்டிய கமக்காரன் ஒருவனே. காலத்துக்கு காலம் மாறிக்கொண்டே போகும் விவசாய முறைகளை அவன் உடனுக்குடனே அறிந்து கொள்வது மிகவும் அவசியம்.

நாடு முழுவதிலும் கிராமங்கள் தோறும் நிறுவப்பட்ட பயிர்ச் செய்கைக் குழுக்களுக்கு ஆரம்ப சூரத்துவம் போய் கும்பகர்ணத்துவம் பிடித்துக்கொண்டதாகத் தெரிகிறது அவற்றிற்கு ஒரு 'இன்ஜெக்ஷன்' போட்டு தட்டி எழுப்பிவிட்டு மாதம் ஒருமுறை கூடவேண்டுமென்று வற்புறுத்தவேண்டியது விவசாயப் பகுதியினரின் கடமை. இக் கூட்டங்களில் மேலே சொன்ன புதிய விவசாய முறைகளைக் கமக்காரருக்குத் தெரியப்படுத்துவதுடன் நேரடியாகவும் செய்துகாட்டலாம்.

— கலப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன்

# இந்துப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் 'நிறுவவேண்டும்

## ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்

''யாழ்ப்பாணம், வியா. இராமநாதன் இந்துப் பல்கலைக்கழகமொன்று யாழ்ப்பாணத்தில் நிறுவ வேண்டும்'' என்ற தீர்மானம் காரைநகர் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற இராமநாதன் இந்துப் பல்கலைக் கழக ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்திற்கு இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஏ. தியாகராசா தலைமைவகித்தார்.

முன்னுள் செனட்டர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் பேசுகையில் கூறியதாவது: ''சைவசமயத்தையும்சைவ ஒழுங்குகளையும் பின்பற்றி இந்துதர்மத்தின் அடிப்படையில் சைவத்தமிழ்ப் பிள்ளைகளுக்கான உயர்தரக் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த பரந்த நோக்குடனேயே இராமநாதவள்ளல் தனது சொத்துக்களையெல்லாம் சாதன மூலமும் சட்டமூலமும் பிற் சந்ததியினருக்கு வைத்துச் சென்றூர். இந்து கலாச்சாரமும், பாரம்பரியமும் அதனுடன் சம்பந்தப்பட்ட சகலருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்பதே அவர் நோக்கம் அன்றி தன் பெயரைச் சூட்டிச் சர்வகலாசாலை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்பதல்ல.''

### எமது கோஷம் வகுப்புவாதமல்ல

மேலும் அவர்தொடர்ந்து பேசுகையில் தமிழ், சிங்களம் என்னும் மொழிவாரியான ரீதியில்சர்வகலாசாலைகள் நிறுவுவதே வகுப்புவாதக் கொள்கையென்றும் இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற சமய அடிப்படையில் சர்வகலாசாலைகள் நிறுவுவது தமிழ்மக்களின் பரந்தமனப்பான்மைக்கும் பண்பாட்டுக்கும் முரண்பாடாகாதென்றும் சொன்னூர்.

### அவர் சொத்துக்களை ஏன் இழக்க வேண்டும்?

''இராமநாதவள்ளல் எங்களுக்கென வைத்துப் போன சொத்துச் சுதந்திரத்தை நாம் ஏன் அனுவசியமாக இழக்க வேண்டும்?

அவருடைய எண்ணத்திற்கும் விருப்பத்திற்கும்மாருக அவரது நம்பிக்கைச் சொத்துக்களையோ, மரணசாசன ஆஸ்திகளையோ பாவிப்பதென்பது முடியாத விஷயம். ஆகவேதான் இராமநாதன் இந்துப் பல்கலைக்கழகம் என்ற பெயரை வைத்து அழைக்க வேண்டியது கட்டாயமாகின்றது'' என்றும் வழக்கறிஞர் திரு எஸ். ஆர். கனகநாயகம் பேசுகையில் கூறினூர்.

யாழப்பாணமே இந்து கலை கலாச்சாரம், சைவசமயம் ஆகியவற்றின் வளர்ப்பிடமாக இருப்பதால் இந்த சர்வகலாசாலை யாழ்ப்பாணத்திலேயே நிறுவப்பட வேண்டுமென்றும் அவர் சொன்னூர்.

### சமய துவேஷம் எனக்கில்லை!

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது: ''நான் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து கல்லூரிகளில் பயின்றவன். எனது ஒரே சகோதரன் கத்தோலிக்க குரு. எனக்கு மதத்துவேஷமில்லை. கத்தோலிக்கர்களுக்கு கண்டியிலுள்ள அம்பிட்டியாவில் தேசிய கத்தோலிக்க செமனரிக் கட்டிடங்களும்எல்லா நவீன வசதிகளும் இயல்பும் பலமும் உண்டு. புரட்டஸ்தாந்துகளுக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி போன்றவசதியான உயர்தரக் கல்லூரியுண்டு. முஸ்லிம்கள் தங்களுக்கென இருந்த கொழும்பு ஸாஹிராக் கல்லூரியை சென்ற அரசாங்கம் சுவீகரித்தபோது சுப்ரீம் கோர்ட்டிலும் பிரிவிகவுன்சிலிலும் வழக்காடி மீண்டும் தமக்காக்கிக் கொண்டனர். பௌத்தர்களுக்கு வித்தியாலங்கார, வித்தியோதய சர்வகலாசாலைகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. பௌத்த குருமாருக்கு அனுராதபுரத்தில் ஒன்று தோற்றுவிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஆனுல் இந்துப் பிள்ளைகளின் சகல கல்வி அபிவிருத்திக்கும் சைவசமய கலாச்சார வளர்ச்சிக்கும் ஏற்ற இடங்கள் ஒன்றேனும் இல்லை. ஆகவேதான் இந்து பல்கலைக்கழகம் ஒன்றுநிறுவ வேண்டுமென வற்புறுத்துகிரோம்."

முன்னுள் மாவட்ட நீதிபதியும் திவ்வியஜீவனயாழ். கிளைத் தலைவருமான திரு. செ. தனபாலசிங்கம், முன்னுள் செனட்டர் திரு. பி. நாகலிங்கம் உட்படசபையிலிருந்தவர்களும் கருத்துரை வழங்கினர்.

## இசையரங்கேற்றம்



யாழ்ப்பாணம், வியா. வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்வன் ச. கலியுகவரதனின் வயலின் இசை அரங்கேற்றம் நாளை மாலை வட்டுக்கோட்டைச் சிவன் கோவில் மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் சங்கீதபூஷண பட்டதாரியான இவர் வயலின் இசையில் இரண்டாவது வகுப்பில் விசேஷ பிரிவில் சித்தியடைந்தவர், விழாவுக்கு டாக்டர் அ.க. குமாரசாமி தலைமை வகிப்பார். வட்டுக்கோட்டைக் கிராம சபைத்தலைவர் திரு எஸ் சின்னத்தம்பி உட்படப் பலர்விழாவில் உரைநிகழ்த்துவர்.

## காங்கேசன்துறை சீர்திருத்தப்படும்

### தலைவர் கூறுகிறுர்

மாவிட்டபுரம், புதன் காங்கேசன்துறை நகர சீர்திருத்தம் சம்பந்தமாக பல உடனடிக் காரியங்கள் செய்யப்போவதாகவும் முதலாவதாக காங்கேசன்துறை மின்சார விஸ்தரிப்பை இம்மாத இறுதிக்குள் செய்து முடிப்பதாகவும், பட்டின சபையின் சுற்றுடலில்உள்ள சிறு ஒழுங்கைகட்கு மின்சாரவசதி செய்வதாகவும் பட்டினசபையின் பிற்பகுதியில் உள்ள குடிசைகட்கும் மின்சாரவசதி செய்வதாகவும் தம்மைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி காங்கேசன்துறை கிளையினருக்கு காங்கேசன் துறை பட்டினசபைத் தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் கூறினூர்.

முன்னணியின் தலைவர் திரு. கே. தாமோதரம் பிள்ளை பட்டினத்தின்சந்தையின் சீர்கேட்டைப் பற்றி பிரஸ்தாபித்தபோது, அவர் தான் அதை ஒரு நவீன கட்டிடமாகக் கட்டுவதற்கு தகுந்த ஒழுங்குகள் செய்திருப்பதாகவும் சந்தை வரும் காலத்தில் மிகவும் சுத்தமாக இருக்குமெனவும் கூறினூர்.

## பாட்ணுவில்...!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காலிசெய்யும் ஏற்பாட்டிற்கு முன் நிலைமையைச் சமாளிக்க மக்கள் முன்வர வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இன்று ஆலைகளும், கட்டிட வேலைகளும் தண்ணீர் பற்றுக்குறை காரணமாக மூடப்பட்டன இதன் காரணமாக நாளொன்றுக்கு 5 முதல் 6 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுமென அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் பாட்ணுவில் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவரின் விஞ்ஞான முயற்சி காரணமாக பாட்ணு நகரில் செயற்கை மழை பெய்தது.

# 'இனியாவதுஉனது வாழ்க்கையை நேர்மை நெறிநின்று நடாத்து'

## பெண்ணுக்கு மாஜிஸ்திரேட் புத்திமதி

மாவிட்டபுரம், புதன் ''நீர் உமது கணவனைக் காப்பாற்றுவதற்காக இந்த ஐந்து எதிரிகளுக்கும் எதிராக பொய் முறைப்பாடு செய்து அவர்களை இவ்வழக்கில் மாட்டிவிட்டீர். இப்பொழுதுதான் நீர் செய்த பிழையை உணர்கிறுய். இனியாவது உமது வாழ்க்கையை நேர்மைநெறி நின்று நடத்து''

தாயின் அனுமதியின்றி அவரின் நான்கு பிள்ளைகளை கடத்திச் சென்றதாக காங்கேசன்துறைப் பொலிஸாரால் ஐந்து எதிரிகள் மேல் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் ஐந்து எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நெத்தசிங்கா வழக்காளியான தவரத்தினத்தின் மனைவி செல்வவதியை நோக்கிமேற்கண்டவாறு கூறினூர்.

### குற்றச்சாட்டு

இவ்வழக்கில் அளவெட்டியைச் சேர்ந்தவர்களான கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி, இராமசாமி கந்தையா, மாவிட்ட புரத்தைச் சேர்ந்தவர்களான மாதர் சுப்பிரமணியம், மாதர் வைத்திலிங்கம், மாதர் மகாலிங்கம் உட்பட மற்றும் சிலரும் சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் 10-ம் திகதி இளவாலையில் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும், கோப்பாயைச் சேர்ந்த செல்வவதியின் பிள்ளைகளான கிலர் இராசசெல்வம் (வயது 10), ஸ்ரீகாந்த இராசசெல்வம் (வயது 8), செல்வரோசா (வயது 5), இராசசெல்வி (வயது 3) ஆகிய நால்வரையும் அனுமதியின்றிக் கடத்திச் சென்றதாகவும் காங்கேசன்துறைப் பொலிஸாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம்ஆஜரானூர். பொலிஸ் தரப்பில் சப் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். இராசநாயகம் ஆஜரானூர்.

### வேறு நபருடன் ஓடினூர்

செல்வவதியின் தகப்பனரானவேலுப்பிள்ளைமுருகேசு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''செல்வவதியின் முதல் கணவன் சென்ற வருடம் ஆடிமாதம் 8-ம் திகதி இறந்து விட்டார். இதன் பிறகு செல்வவதி தனது நாலு பிள்ளைகளுடனும் தவரத்தினம் என்பவருடன் ஓடி விட்டார். ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி மூத்த மருமகனின் அந்தியக் கிரியைகள் இரண்டாம் எதிரியின் வீட்டில் நடைபெற்றது. அதற்கு செல்வதி தனது நாலு பிள்ளைகளுடன் வந்திருந்தார். அந்தியக்கிரியைகள் முடிவுற்றதும் செல்வவதி தனது முதல் மூன்று குழந்தைகளையும் என்னுடன் விட்டு போய்விட்டார். பிறகு ஆகஸ்ட் 10-ம் திகதி செல்வவதி இளவாலையிலுள்ள கதிர்காமுவின் வீட்டிலிருப்பதாகக் கேள்விப்பட்டு நான்போய்க் கடைசிக் குழந்தையையும் கூட்டிக் கொண்டு வந்துவிட்டேன். பின்னர் குழந்தைகள் நான்கையும் கோர்ட்டில் பாரம் கொடுத்தேன்.

### அடித்துத் துரத்தினூர்

இந்த வருடம்மே மாதம் 7-ம் திகதி இரண்டாவது குழந்தையை பொல்லால் அடித்துக்காயம் ஏற்படுத்தி விட்டார்கள். நான் குழந்தையை கூட்டிக் கொண்டு போய் கோப்பாய் பொலிஸில் புகார் செய்தேன். பின்னர் யாழ் சட்ட வைத்திய அதிகாரியைக் கொண்டு பரிசோதித்தேன். சென்றமாதம் 17-ம் திகதி நவரத்தினம் செல்வவதியை திருக்கை வாலால் அடித்துத் துரத்தி விட்டார். செல்வவதி பொலிஸிலே புகார் செய்தபின் இப்பொழுது என்னுடன் இருக்கிறுர்.

### மனைவியும் குழந்தைகளும் பொலிடோல் குடித்து...

சிவகுரு தவரத்தினம்சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''நான் செல்வவதிக்கு முன்பு வேறு ஒருவரை விவாகம் செய்தேன். அதனுல் எனக்கு ஐந்து பிள்ளைகள் உண்டு. கடைசிப் பிள்ளையும் மனைவியும் பொலிடோல் குடித்து இறந்து விட்டார்கள். நான் அவர்களைக் கொலை செய்ததாக ஐயுறவுற்று என்னை ஒருகிழமை றிமாண்டில் வைத்திருந்தார்கள் இப்பொழுது நாலு பிள்ளைகளும் பேரனுடன் இருக்கிறுர்கள். செல்வவதியின் புருஷனும் நானும் ரெயில்வேயில் போட்டர் வேலை செய்தோம். அவர் இறந்த 20-ம் நாள் நான் செலவவதியை விவாகம் செய்தேன். இதன் மூலம் எனக்கு ஒரு பெண்குழந்தை உண்டு. சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் பத்தாம் திகதி நானும் செல்வவதியும் அவரின் முதல் தாரத்தின் நாலு குழந்தைகளும் இளவாலையிலுள்ள கதிர்காமுவின் வீட்டிலிருந்தோம். இரவு ஒன்பது மணியளவில் நான் படுத்திருந்தபோது செல்வவதி அழுதுகொண்டு வந்து என்னை எழுப்பி ஐந்து எதிரிகளும் நாலு பிள்ளைகளையும் வந்து தூக்கிச்செல்வதாகக் கூறினூர். நாங்கள் அடுத்தநாள் காங்கேசன் துறைப் பொலிஸில் புகார் செய்தோம். இவ்வருடம் ஆனி மாதம் 17-ந் திகதி செல்வவதியும் பிள்ளைகளும் என்னைவிட்டு தகப்பன் முருகேசுவுடன். வசிக்கிறுர்கள், ஏன் என்னைவிட்டுப் போனூர்கள் என்று எனக்குத்தெரியாது. ஆனுல் நான் திருக்கைவாலாலும் பொல்லாலும் அடித்துத்துரத்திவிட்டேன் என்பது பொய்.

### எச்சரிக்கை

விசாரணை முடிவில் எதிரிகளை சுற்றவாளியாகக்கண்டு விடுதலை செய்து செல்வவதியை மாஜிஸ்திரேட் எச்சரித்தார். பின்னர் தவரத்தினத்தை அழைத்து 'உமக்கு முதல் தாரத்திற்கு நாலு பிள்ளைகள் இருக்கின்றன என்று கூறுகிறீர். அவர்கள் உம்முடைய மாமனுடன் இருக்கிறுர்கள். செல்வவதிக்கும் உன்மூலம் ஒரு பெண் குழந்தையுண்டு. இந்த ஐந்து பிள்ளைகளும் உம்முடையவை. அவர்கள் யாருடன் இருந்தாலும்அவர்களைத்தாபரிப்பது உமது கடமை அதை மறந்துவிடாதீர் என்றூர் மாஜிஸ்திரேட்.

## கூரையை பிரித்து திருட்டு

சென்னை, ஜுலை 13 சென்னையில் சமீபத்தில் நள்ளிரவின்போது ஒரு மார்வாடிக் கடையில கூரையை பிரித்து திருட்டு நடந்துள்ளது தில துப்புதுலக்க பொலிஸ் நாய் வரவழைக்கப் பட்டது.

இது சம்பந்தமாக மயிலாப்பூர பொலிஸார் தீவிர புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

# வட்டுக்கோட்டை கிராமசபையில் எமக்கு பூரண நம்பிக்கையுண்டு

## அராலி வடக்கில் நடந்த பொதுக் கூட்டத்தில் தீர்மானம்

அராலி, புதன் அரரலி வடக்கில் வாழும் 15-ம், 16-ம் வட்டார மக்களுடைய நலனுக்குவேண்டிய மின்சாரம் குடிதண்ணீர் போக்குவரத்து வீதிகள் முதலிய பொதுத் தேவைபற்றி ஆராயும் பொருட்டு அரான் இந்துக் கல்லூரிமண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அராலிப் பகுதியில் வசிக்கும் ஒருசிலர் தற்பொழுது வட்டுக்கோட்டை கிராம சபையிலிருந்து பிரிந்து தனியான ஒரு கிராமசபை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை சம்பந்தமாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

வட்டுக்கோட்டை கிராம சபையின் நிர்வாகத்தில் அராலிவடக்கு பொதுமக்களுக்கு பூரண நம்பிக்கையுண்டென்றும் 15-ம், 15-ம் வட்டாரங்கள் தொடர்ந்தும் வட்டுக்கோட்டை கிராமசபையுடன் சேர்ந்து இயங்கவேண்டுமென்ற தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

திருவாளர்கள் ஏ. சி. சுந்தரம்பிள்ளை, ஏ. கே. கந்தையா, டி. துரைசாமி ஸ்ரோர், கே. நடராசா ஆகியோர் கூட்டத்தில் பேசினூர்கள்.

கூட்டத்திற்கு திரு. டி. ஆர் குணசேகரம் தலைமை வகித்தார்.

இத் தீர்மானத்தின் பிரதியை ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். [illegible] வத்திற்கு அனுப்புவதென்றும் குடிதண்ணீர் சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி வட்டுக்கோட்டை கிராமசபை, [illegible] வதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் செய்த குறும்பு

மைசூர்ப்பாகுத் துண்டுகளை எல்லாம் எவர்சில்வர் தட்டத்தில் அடுக்கிவைத்துக்கொண்டிருந்தாள் தேவி "அம்மா எனக்கு அம்மா" என்று பின்புறமிருந்து தோளுக்கு மேலாகத் தன் பிஞ்சுக் கரத்தை நீட்டிக் கெஞ்சிக் கேட்டான் மோகன். மணி எட்டடித்து ஓய்ந்தது. எப்போது போய் திரும்புவது? யாழ்ப்பாணத்துக்குப் போய்த் திரும்ப இரண்டு மணிநேரத்துக்கு மேல் பிடிக்குமே என்று யோசித்துக் கொண்டே அவசரமாக வேலையில் முனைந்திருந்த தேவி பின்னால் வந்த பாலகனைக் கவனிக்கவில்லை முதலிலேயே பார்த்திருந்தால் சட்டென்று மறைத்து விட்டிருக்கலாம். இப்போது கொடுக்காமல் என்ன செய்வது?

பாலகனுக்கோ கண்டதெல்லாம் கொடுக்கப்படாதென்று வைத்தியர் கூறியிருக்கிறார்

"உஸ்! தொந்தரவு செய்யாதேடா கண்ணு! இந்தா" எவர்சில்வர் தட்டை இடக்கையால் மறைத்துக் கொண்டு தட்டிலிருந்ததில் கொஞ்சம் எடுத்துக் கொடுத்தாள்.

"ஊஹ்ம்! முழுசாத்தா?" என்று சிணுங்கினான்.

நேரமாகிறதே என்ற ஆத்திரம் அவளுக்கு. தட்டிலிருந்த தூளையும், சிறுசிறு கட்டிகளையும் எடுத்து மறைத்து வைத்தாள். காலைக் கட்டிக்கொண்டு அழுத குழந்தையைப் பலவந்தமாக நகர்த்திவிட்டு குளிக்கும் அறைக்குள் தேவி போய்விட்டாள்.

பாலகன் தரையில் உருண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டான் சற்று நேரம் அழுது ஓய்ந்தான் பாலகன். தாய் மைசூர்ப்பாகு வைத்த இடத்திற்குப் போய் இருக்குமிடத்தை ஆராய்ந்தான். ஒருவிதமாக மைசூர்ப்பாகு இருந்த இடத்தைக் கண்டுவிட்டான். தட்டிலிருந்த மைசூர்ப்பாகை ஒவ்வொன்றாக எடுத்து மறைத்துவிட்டு ஒரு மைசூர்ப்பாகைக் கொண்டு வந்து தாய்க்குத் தெரியாமல் சாப்பிட்டுக்கொண்டு இருந்தான்.

குளிக்கும் அறையிலிருந்து திரும்பிய தாய் மோகனைக் கண்டதும் ஆச்சரியப்பட்டாள்.

பாலகன் வாய் முழுதும் ஏதோ மா இருந்தமாதிரித் தென்பட்டது அவளுக்கு. ஓடிவந்து தான் ஒழித்து வைத்த இடத்தில் மைசூர்ப்பாகு இல்லாததைக் கண்டு திகைத்தேபோனாள். சுற்றும் முற்றும் தேடினாள். கிட்டவில்லை. தன் மோகனைக் கூப்பிட்டாள் பாலகன் கையில் மைசூர்ப்பாகுத் துண்டு இருந்ததைக் கண்டு "யாரடா கண்ணு இது தந்தது?" என்று கேட்டாள்.

"அப்பிச்சி..." என்று உயரக் காட்டினான்.

தாயோ உயரத்திலிருக்கும் இடமெல்லாம் தேடினாள். கிடைக்கவில்லை. பாலகன் கையிலோ மைசூர்ப்பாகு காலியானது. காலியானதைக் கண்ட தாய் பாலகனுக்கும் தெரியாமல் மைசூர்ப்பாகு தான் வைத்த இடத்தில் மறைந்திருந்தாள். பாலகன் தன் கையில் மைசூர்ப்பாகு இல்லாததைக் கண்டு பின்பும் தான் மறைத்துவைத்த இடத்துக்கு ஓடிப்போனான். இதைக்கண்ட தாயும் பாலகனுக்குப் பின்புறமாகப் போனாள். மோகன் மைசூர்ப்பாகு எடுக்கையில் ஒன்று தவறிக் கீழே விழுந்து அவன் பின்னால் இருந்தது. அதை எடுக்கத் திரும்பிய பாலகன் தாய் நிற்பதைக் கண்டு "அம்மா எனக்கு அம்மா" என்றான்.

"குறும்புக்காரப் பயலே இது யாரடா உனக்குச் சொல்லித்தந்தது?" என்று கட்டி வாரியணைத்து முத்தமிட்டாள். தேவியும், நாங்களும் பாலகன் செய்த குறும்பை நினைத்து நினைத்துச் சந்தோஷப்பட்டோம்.

—ஏ. கே. சூரியமூர்த்தி

# குழந்தையின் உணவு

குழந்தைக்குத் தாய்ப்பால் சிறந்த உணவு. பால் கொடுக்கும் வேளைகட்கு இடையில் குழந்தைக்கு இளஞ்சூடான வென்நீர் கொடுக்கலாம். குளந்தை பிறந்து இரண்டாவது வாரம் முதல் கொட்லிவர் எண்ணெயை நாலுதுளி முதல் ஆறுதுளி வரை தினம் ஒரு தடவை கொடுக்கலாம். ஆரஞ்சுப் பழரசம்வென்நீருடன் கலந்து பால் கொடுக்கும் வேளைகட்கு மத்தியில் கொடுக்கலாம்.

மூன்ருவது வாரம் முதல் கனிந்த வாழைப்பழம் நன்ருக மசித்துக் கொடுக்கலாம். படிப்படியாக அளவைக் கூட்டி, தினம் ஒன்று அல்லது இரண்டு வேளைகொடுக்கலாம்.

நாலாவது மாதம் முதல் உணவில் சிறு மாறுதல் செய்யலாம். முட்டையை வேகவைத்து, மஞ்சள் கருவுடன், பால் விட்டு நன்ருகப் பிசைந்து இனிப்பும் சேர்த்து, பால் கொடுக்குமுன் ஊட்டலாம் ஒருவயது ஆகுமளவுக்கு வெள்ளைக் கரு கொடுக்கலாகாது

கைக்குத்தரிசி, கோதுமை மா முதலியவைகளைக் கூழாய்க் காய்ச்சி பால் சேர்த்துக் கொடுக்கலாம். அல்லது காய்கறிகளில் ஏதாவதொன்றை வேகவைத்துக் கொடுக்கலாம். ஐந்தாவது மாதம் முதல் ஆப்பிள் கொய்யா, மாம்பழம் முதலியன வேகவைத்துக் கொடுக்கலாம். ஆருவது மாதம் முதல் தக்காளிப்பழம் போன்றவற்றை விதை நீக்கிக் கொடுக்கலாம்.

ஆறு முதல் எட்டு மாதமான குழந்தையின் உணவு முறை: காலை 6 அல்லது 7 மணிக்கு 1 முட்டை மஞ்சள் கரு. வாழைப் பழம் மசித்தது 1—2 அவுன்ஸ் பால் 7—8 அவுன்ஸ்.

காலை 8 அல்லது 9 மணிக்கு ஆரஞ்சுப் பழரசம் 4 அவுன்ஸ், வைட்டமின் ஏ டி, 6—9 துளி.

காலை 10 அல்லது 11 மணிக்குத் தானியக்கஞ்சி 1—2 அவுன்ஸ், வேகவைத்த பழம் 7—8 அவுன்ஸ், மாலை 2 அல்லது 3 மணிக்கு மசித்த காய்கறி 1—2 அவுன்ஸ் பால் 7—8 அவுன்ஸ்.

மாலை 6 அல்லது 7 மணிக்கு வாழைப் பழம் 1—2 அவுன்ஸ் பால் 7—8 அவுன்ஸ்.

இரவு 10 அல்லது 11 மணிக்கு பால் 7—8 அவுன்ஸ். ஒன்பது அல்லது பன்னிரண்டு மாதம் சென்றபின் குழந்தையின் உணவில் கடித்து மெல்லக் கூடியவற்றையும் [illegible]

(ஆரோக்கியமும் [illegible] ஆயுசும்)

செல்வி கோ. சிவஞானவதி.

# குடும்பக் குறிப்புகள்

— கோ. சிவஞானவதி —

பழந்துணியை நீரில் நனைத்துப் பிழிந்துவிட்டு சோபா அல்லது கம்பளத்தின்மீது விரித்து மூடவும். பின்மெல்லிய கம்பால் தட்டித் தூசியை அகற்றவும். தூசி நீங்கும்வரை இதைச் செய்யவும்.

ஃ ஃ ஃ

பேக்கிங் சோடாவில் இரண்டு சொட்டு எலுமிச்சை சாற்றைச் சேர்த்து பல் துலக்கிப் பிரஷில் வைத்துப் பல் தேய்த்தால் புகைப்பிடிப்போரின் மஞ்சள்பற்களை வெள்ளைவெளேரென பளிச்சிடச் செய்யலாம்.

ஃ ஃ ஃ

கையில் மண்ணெண்ணெய்பட்ட வாசனையைப் போக்க கழுவும் நீருடன் கடுகைச் சேர்க்கலாம்.

ஃ ஃ ஃ

நார் விளக்குமாறு உபயோகிக்குமுன் உப்பு நீரில் ஊறவைத்தால் நெடுநாள் உழைக்கும்.

—தகவல்: 'சோவியத்நாடு'

## உங்களின் கவனத்துக்கு

இது உங்கள்பகுதி. இப்பகுதியினைச் சிறப்பிப்பது உங்கள் கடமை. நீங்கள் அனுப்பும் விஷயங்களை இரத்தினச் சுருக்கமாகவிருந்தால், பலருடைய "படையல்"களையும் மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க முடியும். நல்ல விஷயங்களை எழுதியனுப்புங்கள். நிச்சயமாக இப்பகுதியில் இடம் பெறும். உங்களின் அருமையான ஆலோசனைகளும் இங்கு வரவேற்கப் படுகின்றன. 'மங்கையர் மன்றம்' 'ஈழநாடு' த. பெ. எண்: 45, யாழ்ப்பாணம்.

## விவசாய வளர்ச்சியில் வனிதையர் பணி

- கொஸ்னரேவா -

செக்கோஸ்லோவாக்கியாவில் விவசாயத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி, கிராமப்புறத்துப் பெண்களின் நிலைமையிலும் வாழ்க்கையிலும் மாற்றங்கள் நிகழக் காரணமாக அமைந்தது. நாட்டில் உள்ள எல்லாச் சாகுபடி நிலங்களில் தேசியத்தின் பங்கு 91 வீத நிலங்களாகும்.

முன்பு பெண்களால் சிரமத்துடன் செய்துவந்த வேலைகள் எல்லாவற்றிற்கும் இயந்திரங்கள் நிவாரணம் அளிப்பதாக அமைந்து வருகின்றன. பெண்களே இன்று கைத்தொழில் முறைப்படி விவசாயத்தினை சாகுபடி செய்வதில் முன்னேடிகளாக உளர். இந்த முன்மாதிரியான விவசாய அனுபவங்களைக் கொண்டு பெண்கள் இன்று முன்மாதிரியாகக் கால்நடைகள் வளர்ப்பவர்களாகவும் திகழ்கின்றார்கள். பெண்களே விவசாயத்துறையில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் பெரும்பான்மையாக ஈடுபாடுள்ள தொழிலாளர்களாகும்.

இன்னும் சில வருடங்களுக்குள் 260,000 இளைஞர்களும், பெண்களும் விவசாயத்துறையில் உள்ள உத்தியோகங்களில் மர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் இரண்டு [illegible] இன்றேல் நான்கு வருடங்களுக்கு விவசாயத் தொழில் நுட்பக்கல்விக் கூடத்தில் பயில வேண்டும். ஒரு பகுதியினர் விவசாயப் பட்டதாரிகளாக சர்வகலாசாலையில் பட்டம் பெற்றவர்களாகும்.

# மங்கையர் மன்றம்

## மங்கையர் திலகமாகத் திகழும் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

காதலனொருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கைகொடுத்தே மாதரறங்கள் முன்னையைக் காட்டிலும் மாட்சிபெறச்செய்யும் மங்கையர் திலகமாக வட்டுக்கோட்டைப் பிரதிநிதியின் துணைவியார் விளங்குகிறார். மலேசியா மகாநாட்டிற்குப் பார்வையாளராகச் சென்று மலாய்நாட்டில் இவர் நடத்திய உரை, பேராசிரியர் மு. வ. போன்ற அறிஞர்கள் பலரால் பாராட்டப்பட்டது. சிறந்த பாடகியாகவும் பேச்சாளராகவும் அரசியல் துறையில் கணவரோடு தோளோடு தோள் நின்று உழைத்து மக்களுக்குப் பொதுப்பணி செய்து வருபவரும், குடும்பச் சுடராக இல்லத்தில் திகழ்பவருமான திருமதி மங்கையர்க்கரசியாரின் பேட்டி!

பேட்டி:-

செல்வி க. பூரணம்



அரசியலில் சிறுவயதில் இருந்தே உங்களுக்கு ஆர்வமுண்டா?

சிறுவயது முதல் தமிழில் மிகுந்த ஆர்வமுண்டு. சங்கீதம், பேச்சுப்போட்டிகளில் பங்குபற்றுவேன். அரசியலில் ஈடுபாடு, திருமணம் நிச்சயம் செய்த பின்புதான் ஏற்பட்டது. சேர் ஜோன் கொத்தலாவலை யாழ்ப்பாணத்திற்கு வந்தபொழுது எனது கணவர் கறுப்புக் கொடிகாட்டி அதனால் இரத்தம் தோய்ந்த உடுப்புடன் இல்லத்திற்குத் திரும்பினார். அப்பொழுது எங்களுக்குத் திருமணப்பதிவு முடிந்துவிட்டது. அவரதுநிலையைப் பார்த்தபோது பயமும் அதேசமயம் இவரோடு இவரது இலட்சியத்திற்கேற்கப் பொதுத்துறையில் ஈடுபடவேண்டுமென உறுதியும் கொண்டேன்.

திருமணத்திற்குப்பின் காதலா, காதலிற்குப்பின் திருமணமா தங்களுக்கு நடைபெற்றது.?

இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்திருந்தோம். பெரியோரின் விருப்பத்துடன்தான் திருமணம் நடைபெற்றது.

வருங்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராகத் தாங்களும் வரும் எண்ணம் உண்டா?

என்றுமே எனக்கு இவ் எண்ணம் இல்லை. பொதுத்துறையில் ஈடுபட்டுள்ள எனது கணவரின்இலட்சியம் நிறைவேற அவருக்கு உதவி செய்வதே எனது இலட்சியம். இருவரும் பிரதிநிதிகளாகச்சென்ருல் குடும்பத்தைச் செம்மையாக நடத்தமுடியாது. தனது துறைக்கு என்றும் ஒத்துழைத்து குடும்பத்திலேயே தனது நேரத்தைப்பயன்படுத்தும் பெண்மணியையே செய்யவேண்டுமெனக் கருதியே என் கணவர் என்னை திருமணம் செய்தார். தேர்தல் காலத்திலும், கச்சேரியில் சத்தியாக்கிரகம் செய்தபொழுதும் எனக்கு ஓய்வு கிடைப்பது மிக அரிதாக இருந்தது. பிள்ளைகளின் கடமையை அப்பொழுது நன்குகவனிக்கமுடிவதில்லை. கணவருடன் பொதுத்துறையில் ஈடுபட வெளியுலகிற்குச் செல்லும்பொழுது குழந்தைகளை அம்மா கவனிப்பார்.

இன்று இலங்கைப்பாராளுமன்றத்தில் ஒரு தமிழ்ப் பெண்பிரதிநிதி கூட இல்லாமைக்கு காரணமென்ன?

பெண்கள் பலர் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்திற்குச் செல்லவேண்டுமென முழுமூச்சாக விரும்புகிறேன். தமிழ்ப்பெண்மணிகள் சிறந்த அறிவாளிகளாகவும், பேச்சாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும் இருக்கின்றனர். இராமச் சூழ்நிலையில் பலர் குடத்துள் விளக்குப்போல இருக்கிருர்கள். சமுதாய நிலை காரணமாக அவர்களது அறிவு ஏனையோருக்குப் பயன்படாது அவர்களோடேயே மடிந்து விடுகிறது. தமிழ்த்தலைவர்கள். அறிஞர்கள் சிந்தித்தால் பல நங்கையர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கலாம். அரசியல் துறையில் உழைப்போர் பலரது போற்றுதலையும் தூற்றுதலையும் கேட்க வேண்டியிருக்கும். அரசியல் துறையில் கணவருக்கு உதவியாக உழைத்துவரும் என்னை அப்பப்பா! எப்படியெல்லாம் சமுதாயத்திலுள்ள சிலர் திட்டினர்கள் எனது கணவரது ஒத்துழைப்பு இருப்பதால் மற்றவர்களது திட்டு என்னைப் பாதிப்பதில்லை.

(2-ம் பக்கம் பார்க்க)

## நெஞ்சத்தில் நிலைக்க

— "கண்ணாடி" —

வளரும் நங்கையருக்கு இதோ சில குறிப்புகள். இவை உங்கள் நெஞ்சத்தில் நிலைக்கட்டும்!

**அஷ்டலக்ஷ்மி**

தனலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, கஜலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, விரலக்ஷ்மி, வித்யாலக்ஷ்மி, தைர்யலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி.

**நவசக்தி**

வாமை, காளி, பலப்பிரமதனி, கேஷ்டை, கலவிகரணி, சர்வபூதமனி, ரௌத்ரி, பலவிகரணி, மனேன்மணி.

**பஞ்சகன்னியர்**

அகலிகை, தாரை, திரௌபதி, மண்டோதரி, சீதை.

**எட்டுவகை மணங்கள்**

பிராம்மம், ஆசுரம், தெய்வம், காந்தர்வம், ஆருஷம், ராட்சஸம், பிரஜாபத்யம், பைசாசம்.

**கற்புக்கரசி**

அருந்ததி, சுநிதி, உலோபாமுத்திரை, சாவித்திரி, மேனை, அனுசூயை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாஜி பொலிஸ் கான்ஸ்டபிள் கொலை வழக்கு

யாழ்ப்பாணம், வியா.

பெரியவிளானில் மாஜி பொலிஸ் கான்ஸ்டபிள் க. சிவகுருநாதன் என்பவரை கடத்திச் சென்று கொலை செய்ததாக சந்தேகத்தின் பேரில் அதே ஊரைச் சேர்ந்த எஸ். கந்தசாமி. பூமணி கந்தசாமி, எஸ். மாணிக்கம், ஞார்த்தம்மா மாணிக்கம், கார்சாரதி எஸ். சின்னத்துரை ஆகியோர் இன்று மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சங்கானை பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. மென்டிஸ் சாட்சியமளிக்கையில் ஒரு தடி, சேலை, சாரம், ஒரு ஷேர்ட் ஆகியவற்றை அரசாங்க பரிசோதனைக்கு அனுப்பவேண்டுமென நீதிபதியைக் கோரினார்.

முதல் நான்கு எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் தாக்கல் செய்திருந்த மனுவில் எந்த ஒரு குற்றவாளியையும் 15 தினங்களுக்கு மேல் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாது விளக்கமறியலில் வைக்க முடியாதென தெரிவித்தார்.

இவ்வழக்கைப் பார்வையிடுவதற்கென மல்லாகம் கோர்ட்டுக்குள்ளேயும் வெளியேயும் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

திரு. ரி. கணேலிங்கம் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் முதல் நான்கு எதிரிகள் சார்பிலும் ஆஜரானார். திரு. ஏ. அமிர்தலிங்கம் திரு. நவரத்தினத்தின் அனுசரணையுடன் 5-ம் எதிரி சார்பில் ஆஜரானார்.

நீதிபதி மேல்விசாரணையை இம்மாதம் 18-ந் திகதி வரை ஒத்திவைத்தார். (ந. நி)

## உத்தியோகத்தர் தெரிவு

கோண்டாவில், புதன்

இணுவில்மத்தியஸ்ரீமுருகன் சனசமூகநிலைய மண்டபத்தில் நேற்று திரு. சுப்பிரமணியம் தலைமையில் இராமநாதன் இந்துப் பல்கலைக் கழக பிரசார ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கலந்து கொண்டார். கூட்டத்தில் இராமநாதன் இந்துப்பல்கலைக்கழக இணுவில் கிளையின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் செ சுப்பிரமணியம், காரியதரிசி பொ தணிகாசலம், இணைக்காரியதரிசி பொ தெட்சணாமூர்த்தி, தனாதிகாரி செ கனகலிங்கம் மற்றும் நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்

## சிறுமியின் மீது கொதிக்கும் எண்ணெ!

புத்தளம்' வியாழன்

உடம்பில் பலத்த எரிகாயங்களுடன் 12 வயதுச் சிறுமி ஒருத்தி, புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள செய்தி எமக்குக் கிடைத்துள்ளது.

அவளுடைய எஜமானியே கொதிக்கும் எண்ணெயை தன்மீது ஊற்றியதாக அச்சிறுமி புகார்செய்துள்ளாள். புத்ளம் பொலிசார் புலன் விசாரணைசெய்கின்றனர்.



## புதிய ஜே. பி.

கொழும்பு, புதன்

பொதுநலப் பிரியரும் சிறந்த சமூகசமய சேவகரும் கொழும்பு லீலாஸ்டோர்ஸ், நியூலீலா அச்சகம் ஆகியவற்றின் உரிமையாளருமான திரு. த. ச. சின்னத்துரை கொழும்பு மாவட்டத்துக்கு சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு பி ஜி எஸ் டேவிட் முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்,

இலங்கை இந்து மாமன்ற முகாமைக்குழு அங்கத்தவராகவும் கொழும்பு கதிர்காம யாத்திரிகத்தொண்டர் சபை உபதலைவராகவும், கொழும்பு மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வவிநாயகமூர்த்தி கோவில் தர்மகர்த்தாவாகவும் பல வருடங்களாகக் கடமையாற்றி வருகின்றார்.

சிங்களதமிழ்-ஐக்கியத்தில் அதிக ஆர்வமுள்ள இவர் கொழும்பு புறக்கோட்டை ஐக்கியபோதிராஜ சமித்திய பௌத்த சங்கத்தின் தனாதிகாரியாகவும் தமிழ்—சிங்கள பௌத்த சங்கத்தின் தனாதிகாரியாகவும் சேவைபுரிந்து வருகின்றார்

வர்த்தகத்தில் மாத்திரமன்றி கைத்தொழிலிலும் ஆர்வங்கொண்ட இவர் மினுவாங்கொடை பிறீலங்கா இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்திலும் பிரதம பங்காளராய் இருக்கின்றார்.

தமிழ்க்கலண்டர் வெளியீட்டில், சமூக சமயப் பெரியார்களின் சித்திரங்களையும் வரலாறுகளையும் தொகுத்து வெளியிட்டு, இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியுள்ளார்.

## 'மக்களின் ஊழியராக மாறவேண்டும்'

சுழிபுரம், புதன்

'அரசாங்க சேவையில் அமர்ந்திருக்கும் உத்தியோகஸ்தர்கள் தாங்கள் மக்களின் ஊழியர்களென கடமையாற்றும் காலம் இது அன்னிய ஆட்சியில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களில் இன்றும் சிலர் தாம் மன்னர்கள் என எண்ணி நடக்கின்றனர். இவர்கள் மக்களின் ஊழியர்களாக மாறவேண்டும். அப்போது தான் மக்களால் போற்றப்பட்டு பாராட்டப்படுவர் என வலிகாமம் மேற்கு சுகாதாரக் கந்தோர் பால் விநியோக மேற்பார்வையாளராகக் கடமையாற்றி மட்டக்களப்புக்கு மாற்றலாகிச் செல்லும் திரு. கே. சிவபாதத்திற்கு வலி மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்கத்தினர் அளித்த பிரிவுபசார விழாவில் கலந்து கொண்டு பேசிய வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

விழாவுக்கு திரு. து. இராமநாதன் தலைமைவகித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், அரசாங்கம் ... வச பால் விநியோகத்தை நடத்துகின்றது. இதனால் எத்தனையோ ஏழைகள் அதிக பயனடைகின்றனர், யாழ்ப்பாணத்திலே மிகவும் சிறந்த பாற்பண்ணை சங்கம் எனது தொகுதியில் இருப்பதாக நான் செல்லும் இடமெல்லாம் கூறுவதுண்டு திரு. சிவபாதம் போன்றவர்களின் விடாமுயற்சியே இதற்கு முக்கிய காரணமாகும்.

திரு. கே. சிவபாதம் தமக்களித்த பாராட்டுக்கு நன்றிதெரிவித்துப் பேசினார்

# நான்காவது வருடமும் சாபி இல்லமே சாம்பியனாகியது!

யாழ்ப்பாணம், வியா.

''வெற்றிதோல்வியைமனதில் வைத்துக்கொண்டு போட்டிகளில் ஈடுபடக்கூடாது. போட்டிகளில்கலந்து முன்னேறவேண்டும்என்பதே மாணவர்களது உள்ளங்களில் நிறைந்திருக்கவேண்டும். அதுவே உண்மையான விளையாட்டுப்போட்டியின் நோக்கமாகும்'' இவ்வாறு ஒஸ்மானியா கல்லூரியில் இவ்வருடம் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பலாலி ஆசிரியபயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. கந்தசாமி பேசுகையில் சொன்னார்.

தொடர்ந்து அவர் தமது உரையில் இப்போட்டிகளில் மாணவர்கள் காட்டிய திறமையும் ஆர்வமும் இக்கல்லூரி வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது என்றும் கூறினார்.

போட்டி முடிவுகள்: கனிஷ்ட பிரிவு சாம்பியன்; றகீம் (சாபி இல்லம்), மத்திய பிரிவு சாம்பியன்: அன்றப் (இக்பால் இல்லம்). சிரேஷ்ட பிரிவு சாம்பியன்கள்: சுவர்ஜோ, அபுல்முலபா, (இக்பால இல்லம்).

136 புள்ளிகளைப் பெற்ற சாபி இல்லம் இவ்வருடமும் சாம்பியனாகியது. கடந்த நான்கு வருடங்களாக சாபி இல்லமே சாம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

# "சிங்கள ஊழியர் தமிழ் படிக்கும்வரை தமிழ் ஊழியரே சிங்களம் படியாதீர்!"

மல்லாவி, செவ்வாய்

சிங்கள அரசாங்க ஊழியர்கள் தமிழ் படிக்கும்வரை தமிழ் அரசாங்க ஊழியர்களும் சிங்களம் படிக்கவேண்டாம் என தமிழ் அரசாங்க ஊழியர் தொழிற்சங்கங்களைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை கிளிநொச்சித் தொகுதி வாலிப முன்னணி தனது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது.

''தேசிய அரசாங்கம் தமிழினத்திற்குத் தரமுன் வந்த சலுகைகள் ஒன்றேனும் நல்லமுறையில் அமையவில்லை, சிங்கள அரசாங்க ஊழியர்கள் தமிழும், தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களமும் படிக்க வகைசெய்வதாக ஐ. தே. கட்சி கூறியிருந்தபோதிலும் தமிழ்அரசாங்க ஊழியர்கள்மேல் மாத்திரம் சிங்களத்தைத் திணிப்பது கண்டனத்திற்குரியதாகும். சிங்கள அரசாங்க ஊழியர்கள் தமிழ் படிக்கும்வரை தமிழ் அரசாங்க ஊழியர்களும சிங்களம்படிக்கவேண்டாமென்று தமிழ் அரசாங்க ஊழியர் தொழிற்சங்கங்களை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சித் தொகுதி வாலிப முன்னணி கேட்டுக்கொள்கின்றது'' என அந்தத் தீர்மானம் குறிப்பிடுகின்றது.

இக்கூட்டத்திற்கு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமை தாங்கினார்.

## புதிய நீதியரசர்

கொழும்பு, புதன்

அசைஸ் கமிஷனராக இருக்கும் திரு. வி. சுப்பிரமணியம் சுப்ரீம் கோர்ட்டில் நீதியரசராக நியமிக்கப்படுவார் என்று அறியப்படுகிறது. நீதியரசர் திரு. எ. பி. டி. சில்வா ஓய்வு பெற இருப்பதால் அவர் இடத்துக்கு திரு. சுப்பிரமணியம் நியமிக்கப்படக்கூடும் என்று கருதப்படுகின்றது.

திரு. ஜோர்ஜ் சமரவிக்கிரமா கியு. சி., அசைஸ் கமிஷனர் சி. ஜி. வீரமந்திரி ஆகியவர்களின் பெயர்களும் இந்தப் பதவி சம்பந்தமாக அடிபடுகிறது.




## கொழும்பு

வியாழன் .14-7-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இன்னிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 சுதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவ மன்றம், 5-45 இசைமெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை பாடல், 7-00 பேச்சு 'உக வங்கியும் பொருளாதார அபிவிருத்தியும் — டாக்டர் வி. கணேசலிங்கம், 7-15 வாத்திய இசை, 8-00 மூஸ்லிம் நிகழ்ச்சி, 7-30 நாடகம் 9-15 வாத்திய இசை, 9-30 நிலைய ஒலிப்பதிவுகள்.

## மீன் தட்டுப்பாட்டை குறைக்க முயற்சி

யாழ்ப்பாணம், வியா.

வட இலங்கையை எதிர்நோக்கியிருக்கும் மீன்பிடித் தட்டுப் பாட்டைக் குறைத்து படித்த இளைஞர்களுக்கு ஓரளவு வேலைவாய்ப்பளிக்கும் நோக்கத்துடன் மக்கள் மீன்பிடி விநியோக இயக்கமொன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தினரால் பிடிக்கப்படும் மீன்கள் உள்ளூர் சந்தைகளில் குறைந்த விலையில விநியோகஞ் செய்யப்படுமென்றும் விற்பனையில் மிகுதியாகும் மீன்கள் கருவாடாக மாற்றி விற்கப்படுமென்றும் தெரியவருகிறது.

## மணவாளக் கோலம்

சண்டிலிப்பாய், புதன்

சண்டிலுப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவில் மணவாளக்கோல நவோத்திர சத சங்காபிஷேகம் இம்மாதம் 15-ந்திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறும்.

அன்று இரவு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.


களைப்பா?

உத்தம சத்தூட்டும் இரு மடங்கு சக்தி வாய்ந்த

நுவரேலியா ஸ்டவுட் அருந்துங்கள்

அது தருவது

இரட்டிப்பு உறுதி! இரட்டிப்பு ஊக்கம்! இரட்டிப்பு சக்தி!

மதுரமானது மிருதுவானது விட்டமின் பி செறிந்தது



சிலோன் புருவரி லிமிட்டெட், நுவரேலியா.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜூரிசபையைக் கலைத்து புதிய விசாரணைக்கு உத்தரவு

## உடுவில் கொலை வழக்கு

## விசாரணையில் திடீர் திருப்பம்!

யாழ்ப்பாணம், வியா. உடுவில் கொலை வழக்கு நேற்றுக்காலை இரண்டாவது தினமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதியரசர் ஜூரிசபையைக் கலைத்து புதிய விசாரணைக்கு உத்தரவிட்டார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையைப் பார்ப்பதற்காக நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

சண்முகம் அரியராசா என்பவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து சுமார் ? மணிநேரம் ஜூரிசபையினரின்றி அத்தகவல்பற்றி விசாரணை நடைபெற்றது

விசாரணையின்பின் ஜூரிகளில் ஒருவரை சுப்பிரமணியம் என்பவர் சந்தித்ததாக தகவல் கிடைத்துள்ளதாகவும் இதன்காரணமாக ஜூரிசபையைக் கலைத்து புதிய விசாரணைக்கு உத்தரவிடுவதாகவும் இந்த இடைக்காலத்தில் இரகசியப்பொலிஸார் இத்தகவல்பற்றி உடனடியாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் நீதியரசர் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. என். வீரசிங்கா இத்தகவல்பற்றி விசாரணை செய்வதற்காக இத்தகவலைக் கொடுத்த சண்முகம் அரியராசா என்பவரையும் சுப்பிரமணியம், சிவபாலசிங்கம், சரவணபவான் ஆகியோரையும் இத்தகவல் சம்பந்தப்பட்ட ஜூரியையும் அழைத்துச் சென்றார்.

இத்தகவல் சம்பந்தமாக உடனடியாக விசாரணை செய்ய வேண்டும் என திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நீதியரசரைக் கேட்டுக் கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட நீதியரசர் உடனடியாக விசாரணை செய்யுமாறு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் உத்தரவிட்டார்.

உடுவில் கொலைவழக்கில் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி. அட்வகேட் எம். எஸ். சுந்தரலிங்கத்தின் உதவியுடனும் புறக்டர் ரி. குணரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் வீ. கே. சுந்தரலிங்கம் ஆஜரானார்.

உடுவில் கொலைவழக்கு அடுத்த பருவகால விசாரணையின்போது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அடுத்த பருவகால விசாரணை இம்மாதம் 26-ம் திகதி நீதியரசர் திரு. ப. சிறிஸ்கந்தராசா முன்னிலையில் ஆரம்பமாகும்.

---

கிராமப்புற சிறுவர்கள்

# உணவுக்காகவே பாடசாலை செல்கின்றனர்

கொழும்பு, புதன் கிராமப்புறங்களில் அநேகமான பிள்ளைகள் இலவசமாக வழங்கப்படும் மத்தியான உணவைப் பெறுவதற்காகவே பாடசாலைகளுக்கு செல்வதாக கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும் பரிசோதகர்களும் தெரிவித்துள்ளனர்.

சில இடங்களில் பெரிய மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லும் வயது வராத தமது சகோதரர்களையும் தாம் பயிலும் பாடசாலைகளுக்கு மத்தியான உணவுபெறுவதற்காககூட்டி வருவதாகவும் அறியப்படுகிறது.

கிராமப் புறங்களிலுள்ள பிள்ளைகள் போதிய உடை வசதிகளற்று வாழ்வதாகவும் தேவையான புஸ்தகங்களை வாங்கமுடியாத நிலையிலிவர்கள் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு மனிதாபிமான பிரச்னையென கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார். இப்பிரச்னைக்கு கல்வி இலாகா அதிகாரிகள் மட்டும் தனித்து தீர்வுகண்டுவிடமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களும் இதேபோன்ற அபிப்பிராயத்தையே தெரிவித்துள்ளன.

---

# இராணுவத்தினரின் இரண்டாவது கெடுபிடி

## கிளிநொச்சிப்பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி. புதன் வெற்றிலைக்கேணியில் ராணுவத்தினர் மீனவர்களைத்தாக்கி. மீன்களைச் சூறையாடி வெடித்து நாசம் விளைவித்ததாக கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்திடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

ராணுவத்தினரின் இந்த செயல்பற்றி உடன் நடவடிக்கை எடுக்கும்படி எம் பி. பிரதமரைக் கோரியுள்ளார்.

ராணுவத்தினர் மூன்று தினங்களுக்குள் இரண்டாம் தடவையாக இப்படியாக இப்பகுதியில் நடந்துகொண்டிருக்கிறார்களெனவும் எம், பி. பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

சிலநாட்களுக்கு முன்னர் புதிதாக அமைக்கப்பட்ட வெற்றிலைக்கேணிமுகாமைச் சேர்ந்த ராணுவத்தினரே மீனவர்களைத் தாக்கினராம்.

தமதுவாழ்க்கையே ராணுவத்தினரின் பயங்கரச் செயலால் பாதிக்கப்பட்டுவிட்டதாக மீனவர்கள் அஞ்சுகிறார்கள்.

இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பெரிதும் பீதியடைந்துள்ளதாகத் தெரிகிறது.

கிறிஸ்தவத் தேவாலயத்துக்கும், ஒருபாடசாலைக்கும் நடுவிலே இந்த வெற்றிலைக்கேணி ராணுவ முகாம்அமைக்கப்பட்டிருப்பதால் தேவாலயத்துக்குச்செல்லும்பெண்களும், ஆண்களும், பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும், ஆசிரியர்களும் மிகவும் பீதியடைந்திருக்கிறார்கள் வெற்றிலைக்கேணியில் இருக்கும் ராணுவமுகாமை வாபஸ்பெறுமாறும் திரு. இரத்தினம் பிரதமருக்கு அனுப்பியகடிதமொன்றில் கேட்டுள்ளார்.

---

## திருமலை வங்கி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யர்கள் வேலைக்குத்திரும்ப மாட்டார்கள் என்று தெரிகின்றது

### ஒருநாள் வேலைநிறுத்தம்

வங்கி ஊழியர் பிரச்னைகளும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அங்கத்தவர்கள் நடத்திவரும் வேலைநிறுத்தங்களையும் அரசாங்கம் ஜனநாயக முறையில் தீர்த்துவைக்காது போனால் அல்லது பிரதமருக்கு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் சமர்ப்பித்துள்ள மகஜருக்கு திருப்திகரமான பதில் கிடைக்காமல் போனால் ஒருநாள் அடையாளவேலைநிறுத்தத்தில் இறங்குவதென இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் முடிவுசெய்திருக்கின்றது.

மேலும் வங்கி ஊழியர் சங்க வேலை நிறுத்தத்தையும் ஜ. தொ. காங்கிரஸ் வேலைநிறுத்தத்தையும் நசுக்குவதற்கு அரசாங்கம் அவசரகாலச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்குமானால் உடனடியாக வேலைநிறுத்தத்தில் இறங்கும்படி இலங்கை வர்த்தகசங்க தலைமைப்பீடம் அதன் எல்லா கிளைகளையும் கேட்டிருக்கின்றது.

இதற்கிடையில் வங்கி ஊழியர் வேலைநிறுத்தத்தையும்தோட்டத்தொழிலாளர் வேலைநிறுத்தத்தையும் முடிவுக்கு கொண்டு வரும் தீவிர முயற்சிகளில் தொழில் இலாகா அதிகாரிகள் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் தேவி மகோற்சவம் இன்று மாலை 6 மணி முதல் 7-30 மணி வரை திரு. வி. க. ஆறுமுகத்தின் "திருவிளையாடல்" கதாப்பிரசங்கம் நடைபெறும்.

---

வண்ணை

## வைத்தீஸ்வர விளையாட்டுப் போட்டி

### இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், வியா. வண்ணை. வைத்தீஸ்வர வித்தியாலய பிரதமவகுப்புகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டி வண்ணை வைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தான முகாமையாளர். திரு, வை. கந்தப்பச்செட்டியார் தலைமையில் இன்று மாலை கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறும், திருமதி கந்தப்பச்செட்டியார் பரிசில்கள் வழங்குவார்.

## தமிழரசு யு என் பி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டர் கரணகொட மட்டுமே பேசினார். எதிர்க்கட்சியினரின் திருத்தப்பிரேரணையை எதிர்க்கட்சியினர் அனைவரும் ஆதரித்துள்ளனர். செனட்டர்கள் ஏ. பி. ஜயசூரிய, ஏ, ரி. டி. சவுஸா ரெஜி பெரேரா, அமீம் ஆகியவர்கள்பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கை ஒரே நாடாக இருக்கும் என்பதற்கு அரசியல் சாஸனத்தைத் திருத்துவதின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்படவில்லையென்றும் 29-வது ஷரத்தை ரத்துசெய்ய நடவடிக்கை எடுக்கவில்லை யென்றும், எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தைத் தமது திருத்தப் பிரேரணையில் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---


# அறிவித்தல்

## டாக்டர் க. சி. சண்முகரெத்தினம் ஆயுள்வேத சிகிச்சை நிலையம்

காலஞ்சென்ற டாக்டர் க. சி. சண்முகரெத்தினம் அவர்களின் வைத்திய ஸ்தாபனங்களிலும் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் நேற்று தொடக்கம் பிஷக்வார டாக்டர் ஏ. கனகரெத்தினம் ஏ. எம். ஏ. வி. (முன்னாள் கொழும்பு அரசாங்க ஆயுள்வேத கல்லூரி சித்தவைத்திய பகுதி சிரேஷ்ட போதனாசிரியரும் ஆஸ்பத்திரி வெளிவைத்தியரும், - Visiting Physician) அவர்கள் கடமையாற்றுகின்றார்கள். இவருடன் டாக்டர் சண்முகரெத்தினத்துடன் ஏற்கனவே கடமையாற்றிய டாக்டர் ஏ. இராஜநாயகமும் (எல். ஐ. எம்.), திருமதி என். ரி. எம். எவ். சேவியரும் (டி. ஐ. எம். எஸ்.) தொடர்ந்து பணியாற்றுகின்றனர்,


---

# பம்பாயில் செயற்கை மழைவர வழைக்கப்பட்டது!

பம்பாய், ஜூலை 13

தண்ணீர் பற்றுக்குறை காரணமாகப் பம்பாய் நகரைக் காலிசெய்யும் உடனடித் திட்டமெதுவும் இல்லை என மகாராஷ்டிர முதன்மந்திரி திரு. நாய்க் கூறினார்.

(5-ம் பக்கம் பார்க்க)

---

## பெற்றோர் விருப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டாயப் படுத்தப்படுத்தப் படமாட்டாது எனவும், ஆங்கில மொழி மூலமான போதனை உடனடியாக ரத்துச் செய்யப்படமாட்டாது எனவும் மெதுவாகவே அந்தப் போதனை ரத்துச் செய்யப்படும் எனவும் கல்வி மந்திரி தூதுகோஷ்டியிடம் உறுதியளித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மகாணங்களில் சிங்களத்தில் தங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்க விரும்பும் பெற்றோர்களுக்கு பாடசாலைகள், ஆசிரியர்கள் என்ற வகையில் வேண்டிய உதவி செய்யப்படும் எனவும் கல்வி மந்திரி தூது கோஷ்டியிடம் தெரிவித்தார். இப்பொழுது ஆங்கிலத்தில் தங்கள் கல்வியைப் பெற்று வந்து ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்ட பிள்ளைகள் தொடர்ந்து பல்கலைக்கழகம் வரை ஆங்கிலத்தில் பயிலவும் அனுமதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். எனினும் அடுத்த வருடத்தில் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளில் ஒன்றின் மூலமே ஆங்கிலமொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஆரம்ப வகுப்பு மாணவர்கள் கல்வி பெற முடியும்.

---

## மரண அறிவித்தல்

சரவணை செல்வக் கதிர்காம முருகன் — ஆலயத்தின் உரிமையாளரும், பிரதம பூசகருமான திரு. அந்தோனி செல்லப்பாக்கியம் அவர்களின் அருமை மனைவியும், ஊர்காவற்றுறை திரு. பா. அந்தோனி அவர்களின் மருமகளும் இலங்கைப் புகையிரதப்பகுதியைச் சேர்ந்த திரு. மா. சதாசிவம் அவர்களின் மைத்துனியும் மேற்படி ஆலயத்தின் சாமியம்மாவுமான பொன்னியம்மாள் 11-7-66 திங்கட்கிழமை இரவு சிவபதமடைந்துள்ளார். அன்னாரின் பூதவுடல் 14-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிவரையில் மேற்படி ஆலயத்திற்கு அருகாமையில் நல்லடக்கம் செய்யப்படும். சமாதிநிதி உதவி ஏற்றுக்கொள்ளப்படும். சி. கந்தசாமி, சரவணை மேற்கு, வேலணை. 746

---

## சிறு கதை அரங்கு

யாழ்ப்பாணம், வியாழன். யாழ். இலக்கிய வட்டம் இன்று மாலையாழ். மாநகரசபை பொழுது போக்குச் சங்க மண்டபத்தில் சிறு கதை அரங்கமொன்றை நடத்துகிறது. இரசிகமணி கனகசெந்திநாதன் தலைமை வகிக்கிறார். பழம் பெரும் சிறுகதை எழுத்தாளர்களான திரு. க.தி. சம்பந்தன் வரதர், சு. இராஜநாயகன் மற்றும்சொக்கன் ஆகியோர் இந்த அரங்கில் கலந்து கொள்கின்றனர்.

---

## பொய்ச் சாட்சியம் ஜோடித்த வழக்கு

கொழும்பு, வியாழன் பொய்ச் சாட்சியம் ஜோடிக்க முயன்றதாக 5 பொலிஸ் அதிகாரிகள்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது கே. பி. சந்திரதாஸ என்பவர் சாட்சியமளித்தார்,

வெண்டஸால் என்பவருக்கு மீன் விற்றதாக ஒருபோதும் முதல் எதிரியான திரு. பத்திரணவிடம் தாம் கூற வில்லையென்று அவர் கூறினார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

---

## சீனவுக்கு உபதேசம்

வாஷிங்டன், ஜூலை 13

சமாதானமாக உடனிருந்து வாழும் கொள்கையைக் கடைப்பிடிக்குமாறும், ஆக்கிரமிப்பு நோக்கத்தைக் கைவிடுமாறும் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் சீனத் தலைவர்களைக் கேட்டுக் கொண்டார்.

---


## விற்பனைக்கு

நுவரெலியா புளோறிஸ்ற்

சகல வைபவத்திற்கும் ஏற்ற புதிய மலர் வகைகளும் மலர் முடிகளும் கிடைக்கும் இடம்: குமுதம் சாறி வேக்ஸ், 24/1 பெரிய கடை, யாழ்ப்பாணம். தபால் மூலமும் தொடர்புகொள்ளவும். 754


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org